அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பிக்கிறேன்.

இறை மார்க்கத்தில் உறுதியாக இருப்பதற்கான வழிமுறைகள்

முகவுரை

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே, அவனைப் போற்றி, அவனிடமே உதவியும் தேடுகிறோம், அவனிடமே பாவமன்னிப்புக் கோரி மீளுகிறோம்,

எமது உள்ளங்களில் தோன்றும் தீய விடயங்களை விட்டும், எமது செயல்களின் கெடுதிகளை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம்,

யாருக்கு அல்லாஹ் நேர்வழி காட்டினானோ அவனை வழிகெடுப்போன் யாருமில்லை. யாரை அல்லாஹ் வழிதவறச் செய்து விட்டானோ அவனுக்கு நேர்வழி காட்டுவோன் யாரும் இல்லை.

உண்மையான வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஒருவனைத்தவிர வேறு யாருமில்லை, அவனுக்கு எந்த இணையாளருமில்லை என்று சாட்சி கூறுகிறேன், மேலும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனின் அடியாரும் தூதருமாவார் என்றும் சாட்சி கூறுகிறேன்.

அல்லாஹ்வைப்போற்றி புகழ்ந்ததன் பின்னால்

அல்லாஹ்வின் மார்க்கத்தில் பற்றுறுதியுடன் நிலைத்திருப்பது, நேர்மையுடனும் உறுதியுடனும் நேரான வழியில் நடக்க விரும்பும் ஒவ்வொரு உண்மை முஸ்லிமினதும் அடிப்படைக் குறிக்கோளாகும்

இத்தலைப்பின் முக்கியத்துவம் பின்வரும் அம்சங்களில் பிரதிபலிக்கிறது :

1) முஸ்லிம்கள் வாழும் தற்போதைய சமூகங்களின் நிலை, அவர்கள் மூழ்கிப்போயுள்ள நவீன நாகரீக கவர்ச்சிகள், உலக மோகங்கள், பல் வேறு குழப்பங்கள், மார்க்கம் அன்னியமாகுவதற்குக் காரணமாக அமைந்துள்ள பல வகையான தெளிவற்ற சந்தேகங்கள், மனோ இச்சைகள்

ஆகவே இவ்வாறான இச்சூழலில் மார்க்கத்தை உறுதியுடன் கடைப்பிடிப்போர் குறித்து சிறந்ததோர் உதாரணத்தைக் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள், அதாவது மக்களிடம் ஒரு காலம் வரும், அப்போது மார்க்கத்தைப் பற்றிப் பிடிப்பவர் அக்கிணிக் கங்கை பற்றிப்பிடிப்பவரைப் போல்ஆகி விடுவார்.

ஸலபுஸ்ஸாலிஹீன்களின் (நன்னெறி சார்ந்த முன்னோர்களின்) காலத்தில் வாழ்ந்த முஸ்லிமின் தேவையை விட இன்றைய காலத்து முஸ்லிமுக்குத்தான் மார்க்கத்தில் உறுதியாக இருப்பதற்கான வழிமுறைகள் அதிகம் தேவை என்பதில் அறிவுடையோர் எவருக்கும் எவ்விதச்சந்தேகமும் இருக்க முடியாது. அவ்வுறுதியை அடைந்து கொள்வதற்கு கடுமையான முயற்சியும் உழைப்பும் அவசியம் தேவைப்படுகிறது . இதற்கு இன்றைய கால சூழல் சீர் கெட்டிருப்பது, நல்ல சகோதரர்களின் பற்றாக்குறை, நற்காரியங்களுக்காக உதவி செய்வோரின் பலவீனம், அவர்கள் குறைவாகக் காணப்படுகின்றமை போன்றவை இதற்கான காரணங்களாகும்.

2) இஸ்லாத்தை விட்டும் மதம் மாறி புறமுதுகி காட்டிச்செல்லும் நிகழ்வுகள், இஸ்லாத்திற்காக உழைப்பவர்கள் மத்தியிலேயே பல நெறிபிறள்வுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இது போன்ற முடிவுகள் ஒரு முஸ்லிமுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் அதே நேரம், இந்நிலையிலிருந்து அவர் பாதுகாப்பான ஒரு பாதைக்குச்செல்லும் நோக்கில் மார்க்கத்தில் உறுதியாக இருப்பதற்கான வழிமுறைகளை கண்டறிந்து கொள்வது மிக முக்கிய தேவையாக இருக்கிறது.

3) இத்தலைப்பானது உள்ளத்துடன் தொடர்பான ஒரு விடயமாகும். உள்ளம் குறித்து நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடுகையில் :

"பானையில் உயர் நிலையில் நீர் கொதிக்கும் போது நீரானது மேலும் கீழுமாக புரலுவது போல் மனித உள்ளமானது அதிகம் தடம் புரண்டு நிலை மாறக்கூடியது" என்று கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மத்: 4/6, ஹாகிம் 2/289, அஸ்ஸில்ஸிலதுஸ் ஸஹீஹா: 1772)

நபி (ஸல்) அவர்கள் உள்ளத்திற்கு இன்னுமொரு உதராணத்தைக் குறிப்பிடுகிறார்கள் :

உள்ளம் 'அல்கல்ப்' என்ற பெயரால் அழைக்கபடுவதற்கான காரணம் அது நிலைமாறக் கூடியதாக இருப்பதினாலாகும். "ஒரு மரத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் இறகை காற்று மேலும் கீழுமாக எப்படி அசைக்குமோ அதே போன்றுதான் உள்ளத்தின் நிலையும்" என உதாரணம் கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மத்: 4/408, ஸஹீஹுல் ஜாமிஃ : 2361)

பின்வரும் கவிஞரின் கூற்றுக்கு முன்னரே இது பற்றி ஹதீஸில் கூறப்பட்டு விட்டது :

மனிதனுக்கு "இன்ஸான்" என்று பெயர்வைத்திருப்பது அவனின் மறதியினாலாகும். உள்ளத்திற்கு 'கல்ப்' எனப்பெயர்வைத்திருப்பது அது நிலையற்று இருப்பதினாலாகும்

ஆகவே மனோ இச்சைகளாலும், சந்தேகங்களினாலும் அலைக்களிந்து நிலை தடுமாறும் உள்ளத்தை உறுதிப்படுத்தும் விவகாரம் மிகவும் அபாயகரமானது என்பதால் இப்பணியின் மகத்துவம் மற்றும் சிரமத்திற்கு சமமான சக்திவாய்ந்த வழிமுறைகள் இதற்குத்தேவைப்படுகிறது.

இஸ்லாத்தில் பற்றுறுதியுடன் இருப்பதற்கான வழிமுறைகள்

அல்லாஹ் தனது வேதத்திலும் அவனுடைய நபியினது போதனைகள் மற்றும் அவரது வரலாற்றின் மூலமாகவும் மார்க்கத்தில் உறுதியாக இருப்பதற்கான அநேக வழிமுறைகளை தெளிவுபடுத்தியிருப்பது அவன் எமக்குச்செய்த மாபெரும் அருட்கொடைகளில் ஒன்றாகும். அவற்றில் சிலதை உங்களுக்காக தருகிறோம் :

முதலாவது -அல் குர்ஆனின் பக்கம் முன்னோக்குதல் :

மகத்துவமிக்க அல்குர்ஆன் மார்க்கத்தில் உறுதியாக இருப்பதற்கான முதலாவது வழிமுறையாகும், அது அல்லாஹ்வின் பலமான கயிறும், சரியான பாதையை அறியாது திண்டாடிக் கொண்டிருப்பவனுக்கு தெளிவாக வழிகாட்டும் ஒளியாகவும் உள்ளது, அதனை யார் இறுகப் பற்றிப் பிடித்துக்கொண்டார்களோ அவர்களை அல்லாஹ் குழப்பங்களிலிருந்தும் பிரச்சினைகளிலிருந்தும் பாதுகாப்பான், அதன்வழி நடப்பவர்களை தீமைகளைவிட்டும் காப்பாற்றுவான். அதை நோக்கி எவர் அழைக்கிறாரோ அவர் நேரான பாதையில் செலுத்தப்படுவார்.

அல்குர்ஆன் படிப்படியாக சிறுகச் சிறுக இறக்கியருளப்பட்டதின் நோக்கமே இந்த மார்க்கத்தில் மிக உறுதியாக இருப்பதற்காகத்தான் என்று அல்லாஹ் கூறியிருக்கிறான்.

இறை நிராகரிப்பாளர்களின் சந்தேகங்களுக்கு பதிலளிக்கும் வகையில் பின்வருமாறு கூறுகின்றான்:

"இந்தக் குர்ஆன் முழவதுமாக ஒரே தடவையில் மொத்தமாக அருளப்படக் கூடாதா? என நிராகரிப்போர் கேட்கிறார்கள். உம் உள்ளத்தை இதன் மூலம் உறுதிப்படுத்துவதற்காகத்தான் நாம் சிறிது சிறிதாக ஓதிக்காண்பித்து தனித்தனிப்பகுதிகளாக ஆக்கினோம்,

அவர்கள் உம்மிடம் எந்த உதாரணத்தைக் கொண்டுவந்த போதும் அதற்குரிய சரியான விடையையும் அழகான விளக்கத்தையும் நாம் உமக்கு அளிக்காது இருந்ததில்லை".

(அல் புர்கான் 32-33)

உள்ளத்தைப் பலப்படுத்துவதற்கு அடிப்படையாக அல்குர்ஆன் அமைந்திருப்பதற்கான காரணம் என்ன?

1) அது அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்துவதின் ஊடாக மனித உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்துவதோடு ஈமானையும் விதைக்கிறது.

2) இறைவசனங்கள் முஃமினின் உள்ளத்தில் அமைதியையும் குளிர்ச்சியையும் ஏற்படுத்துவதினால் அவனின் உள்ளத்தில் குழப்பம் தடுமாற்றம் போன்ற அழிவுதரும் புயல்கள் தாக்காது பாதுகாத்து இறை நினைவால் அவனுடைய உள்ளத்தை நிம்மதி பெறச்செய்கிறது.

3) அல்குர்ஆன் ஒரு முஸ்லிமுக்கு சரியான புரிதல்களையும் பெருமானங்களையும் வழங்குவதால் அதனூடாக அவன் தன்னைச் சூழவுள்ள நிலமைகளை நெறிப்படுத்திக்கொள்கிறான்.

அதே போல் ஒரு முஸ்லிமுக்கு விவகாரங்களை சரியாக கையாண்டு அதற்குரிய தீர்ப்பை வழங்குவதற்குரிய அளவுகோள்களை அல்குர்ஆன் வழங்குகிறது. இதனால் அவன் தனது தீர்ப்பில் குழப்பமடையமாட்டான். அவனது கூற்றுக்கள் நிகழ்வுகள் மற்றும் ஆட்களின் வித்தியாசத்திற்கேட்ப முரண்படவும் மாட்டாது.

4) ஏனெனில் இது இஸ்லாத்தின் எதிரிகளான இறை மறுப்பாளர்களும் நயவஞ்சகர்களும் எழுப்பும் சந்தேகங்களுக்கு மறுப்பை வழங்குகிறது. எமது முன்னோர்கள் இவ்வாறான நிலைகளை எவ்வாறு எதிர்கொண்டார்கள் என்பதை எமக்கு முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ள முடியும்.

இதோ சில முன்மாதிரி எடுத்துக்காட்டுகள் :

இதன் மொழி பெயர்ப்பை 44 ல் காண்க! (44 : انظر ترجمته في الرقم

இதன் மொழி பெயர்ப்பை 44 ல் காண்க! (44 : انظر ترجمته في الرقم

இதன் மொழி பெயர்ப்பை 44 ல் காண்க! (44 : انظر ترجمته في الرقم

இதன் மொழி பெயர்ப்பை 44 ல் காண்க! (44 : انظر ترجمته في الرقم

"முஹம்மத் கைவிடப்பட்டுவிட்டார்" என்று இணைவைப்பாளர்கள் கூறியபோது ஸூறதுல் ழுஹாவின் 3 வது வசனமான (உமது இரட்சகன் உம்மை கைவிடவுமில்லை வெறுத்து விடவுமில்லை (என்ற அல்லாஹ்வின் கூற்று அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் உள்ளத்தில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதை நினைத்துப்பார்க்க வேண்டும்?

(பார்க்க : இமாம் நவவியினது ஸஹீஹ் முஸ்லிமின் விரிவுரை பாகம் 12 பக்கம் :156)
இதன் மொழி பெயர்ப்பை 49 ல் காண்க! (49 : انظر ترجمته في الرقم
இதன் மொழி பெயர்ப்பை 49 ல் காண்க! (49 : انظر ترجمته في الرقم
இதன் மொழி பெயர்ப்பை 49 ல் காண்க! (49 : انظر ترجمته في الرقم
முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு சாதாரன ஒரு மனிதரே அல்குர்ஆனை கற்றுக்கொடுக்கிறார், அதாவது அவர் மக்காவில் உள்ள ஒரு ரோம தச்சனிடம் அல்குர்ஆனைப் பெறுகிறார் என்று குறைஷிக்காபிர்கள் பொய்யாக வாதிட்ட போது ஸூறா அந்நஹ்லின் 103 ம் வசனமான (இவர்கள் யாருடன் இணைத்து இவ்வாறு கூறுகிறார்களோ அவரின் மொழி வேற்று மொழியாகும். இதுவோ தெளிவான அரபு மொழியாகும்) என்ற இறைவசனத்தை அல்லாஹ் இறக்கியருளியது நபியவர்களில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்!
இதன் மொழி பெயர்ப்பை 54ல் காண்க! (54: انظر ترجمته في الرقم)
இதன் மொழி பெயர்ப்பை 54ல் காண்க! (54: انظر ترجمته في الرقم)
இதன் மொழி பெயர்ப்பை 54ல் காண்க! (54: انظر ترجمته في الرقم)
இதன் மொழி பெயர்ப்பை 54ல் காண்க! (54: انظر ترجمته في الرقم)
போருக்கு செல்லாதிருக்க எனக்கு அனுமதி தாருங்கள் என்னை சோதனைக்குள்ளாக்காதீர்கள்' (குழப்பத்திற்குள்ளாக்காதீர்கள்) என்று நயவஞ்சகன் ஒருவன் கூறிய வேளை, "அறிந்து கொள்ளுங்கள் அவர்கள்தாம் சோதனைக்குள் (குழப்பத்தில்) அகப்பட்டு விட்டனர்" என்ற ஸூறதுத்தவ்பாவின் 49 ம் வசனத்தை அல்லாஹ் இறக்கியருளி அவனுக்கு பதிலளித்தது, முஃமின்களின் உள்ளத்தில் எவ்வாறான தாக்கத்தை உண்டு பண்ணியிருக்கும்?
இவ்வசனங்கள், முஃமின்களின் உள்ளங்களை மென்மேலும் ஈமானில் (கொள்கையில்) நிலைத்திருக்கச்செய்வதற்காகாவும், பலப்படுத்துவதற்காகவும், சந்தேகங்களுக்கு தக்க பதில் அளித்து அசத்தியவாதிகளை வாயடைக்கச்செய்வதற்காகவுமல்லவா?
எனது இரட்சகன் மீது சத்தியமாக! இதுவே உண்மையான விடயமாகும்.
மேலும் ஹுதைபியாவிலிருந்து மீண்டு வரும் போது பின்னர் இடம்பெற இருக்கும் ஹைபரின் அதிக (கனீமத்) யுத்தப்பொருட்கள் முஃமின்களுக்கு கிடைப்பதாக அல்லாஹ் அவர்களுக்கு வாக்களித்தது மிக அதிசயிக்கத்தக்க விடயங்களில் ஒன்றாகும்,
மேலும், அவற்றை அவர்களுக்கு விரைவுபடுத்துவதாகவும், அவர்கள் மாத்திரமே அதனை எடுக்கச்செல்வார்களெனவும்,
அவர்களுடன் சேர்ந்து செல்வதற்காக நயவஞ்சகர்கள் கோரிக்கை விடுப்பார்கள் என்றும்,
அவ்வேளை முஸ்லிம்கள் அக்கோரிக்கையை ஏற்காது எங்களுடன் நீங்கள் வரவேண்டாம் இது அல்லாஹ்வின் வாக்கு என்று கூறிவிட,
அவர்கள் தங்கள் விடயத்தில் விடாடப்பிடியாகவே இருந்து, அல்லாஹ்வின் வாக்கு மாற்றப்பட வேண்டும் எனவும் விரும்புவர். (கனீமத்) யுத்தகளப் பொருட்களை எடுப்பதற்கான வாய்ப்பு கிடைக்காததினால் அவர்கள் முஃமின்களைப் பார்த்து
நீங்கள் எம்மீது பொறாமை கொள்கிறீர்கள் என்று கூறுவார்கள், இதற்கு அல்லாஹ் பின்வருமாறு அவர்களுக்கு பதிலளிக்கிறான் :
"அவர்கள் குறைவாகவே அன்றி விளங்கிக்கொள்ளமாட்டார்கள்" என்கிறான்.
பின்பு, இந்நிகழ்வுகள் யாவும் அன்றைய முஃமின்களுக்கு முன்னால் ஒவ்வொரு கட்டம் கட்டமாகவும் படிமுறை படிமுறையாகவும் வார்த்தை வார்த்தையாகவும் நிகழ்ந்தது மிக அதிசயிக்கத்தக்கதாகும்!
இங்குதான் நாம் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு முக்கிய விடயம் உள்ளது. அதுதான் அல் குர்ஆனுடன் தங்கள் வாழ்க்கையை இணைத்து, அதனை ஓதி, மனனமிட்டு, அதன் விளக்கத்தைப் படித்து, அதனை ஆழமாக ஆராய்ந்து, அதிலிருந்தே தங்களது வாழ்க்கையை ஆரம்பித்து, அதன் பக்கமே தங்களது அனைத்துப்பிரச்சினைகளின் போதும் மீண்டு அதன் பாலே முன்னோக்கிச்செல்பவர்களுக்கும், மனிதர்களின் பேச்சுக்களை தங்களது முழு இலக்காக ஆக்கி அதில் முழுஅக்கறை கொண்டு ஈடுபாடு காட்டுவோருக்கும் மத்தியிலுள்ள வித்தியாசமாகும்.
எனவேதான், கல்வியைத் தேடுபவர்கள் அல்குர்ஆனையும் அதன் விளக்கத்தையும் தங்கள் தேடலில் பெரும் பங்காக ஆக்கிக்கொண்டால் எவ்வளவு சிறந்ததாக இருக்கும்?
இரண்டாவது :
மார்க்கத்தை உறுதியாக கடைப்பிடித்து ஒழுகுதல் மற்றும் நல் அமல்களில் ஈடுபடல்
இது குறித்து அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான்
"நம்பிக்கை கொண்டோரை அல்லாஹ் இவ்வுலக வாழ்விலும் மறுமையிலும் (மண்ணறை விசார ணையிலும்) உறுதியான வார்த்தையைக் கொண்டு

நிலைபெறச்செய்வான். மேலும் அநியாயக் காரர்களை அல்லாஹ் வழிகேட்டில் விட்டுவிடுவான். அல்லாஹ் தான் நாடுவதைச் செய்வான்".
(ஸூறா இப்ராஹீம் : 27)
கதாதா (ரஹ்) அவர்கள் இவ்வசனத்திற்கு விளக்கம் கூறுகையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள் :
(அல் ஹயாதுத் துன்யா) உலக வாழ்வில் நிலை பெறச் செய்தல் என்பது அவர்களை நன்மை மற்றும் நற்காரியங்களில் நிலைபெறச்செய்வான் என்பதாகும், (பி(f)ல் ஆகிரா) 'மறுமையில்' என்பது மண்ணறை வாழ்வைக்குறிக்கும்.
இதே கருத்தை அநேக ஸலப் அறிஞர்களும் குறிப்பிட்டுள்ளனர்.
(இப்னு கஸீர் ரஹ்மதுல்லாஹ் அவர்களின் தப்ஸீருல் குர்ஆனில் அழீம் பாகம் 3 பக்கம் 421 ப பார்க்க.)
மேலும் அல்லாஹ் குறிப்பிடுகிறான் :
"அவர்கள் தங்களுக்கு அறிவுறுத்தபட்டபடி செயலாற்றுவார்களேயானால் அது அவர்களுக்கு மிகச்சிறந்ததாகவும்,(சத்தியத்தில் அவர்களை) நன்கு உறுதிப்படுத்துவதாகவும் இருந்திருக்கும்".
(ஸூறா அந்நிஸா வசனம் 66)
இந்த வசனத்தில் இடம் பெற்றுள்ள 'அவர்களை நன்கு உறுதிப்படுத்துவதாகவும்' என்பது, சத்தியத்தில் மிக உறுதியாக இருத்தலைக் குறிக்கும்.
இது தெளிவான ஒரு விடயம். காரணம் குழப்பங்கள் தலை தூக்கி பிரச்சினைகள் கடுமையாகும் போது நற்காரியங்களை செய்யாது சோம்பரிகளாக இருப்போரிடத்தில் மார்க்கத்தை உரிய முறையில் பின்பற்றி அதில் உறுதியாக இருக்கும் நிலையை எதிர்பார்க்க முடியாதல்லவா?
ஆனால் ஈமான் கொண்டு நற்காரியங்களில் ஈடுபடுவோருக்கு அவர்களின் உறுதியான ஈமானிய நிலையின் காரணமாக அல்லாஹ் நேரான பாதையை காட்டுகிறான்.
இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் நற்காரியங்களை தொடர்ந்தும் செய்பவர்களாக இருந்தார்கள். குறைவாகச் செய்தாலும் தொடராக செய்வது அவர்களுக்கு அதிக விருப்பத்திற்குரிய காரியமாக இருந்தது.
அவர்களின் தோழர்களிடமும் இப்பண்பு காணப்பட்டது. அவர்களும் ஏதாவது நற்காரியத்தில் ஈடுபட்டால் அதை தொடராக செய்வதுடன் அதில் உறுதியாகவும் நிலையாகவும் இருப்பார்கள். இவ்வாறே ஆயிஷா (ரழி) அவர்கள் ஒரு அமலை –நற்காரியமொன்றை செய்தால் அதை தொடராக பேணி கடைப்பிடித்தொழுகுபவராக இருந்தார்கள்.
நபி (ஸல்) அவர்கள் :
யார் (ஒரு நாளைக்கு)12 பன்னிரண்டு ரக்அத்துக்களை (ராதிபான ஸுன்னத்துக்களை) பேணித்தொழுகிறாரோ அவருக்கு சுவர்க்கம் கட்டாயமாகிவிட்டது' எனக் கூறக் கூடியவர்களாக இருந்தார்கள்.
(ஆதாரம் : ஸுனனுத் திர்மிதி பாகம் 2 பக்கம் 273, இதனைப்பதிவு செய்த இமாம் திர்மிதி, இந்த ஹதீஸ் ஹஸன் அல்லது ஸஹீஹ் என்ற தரத்தில் உள்ளதாக தீர்ப்பளித்துள்ளார்.)
இந்த ஹதீஸ் ஸஹீஹ் அந்நஸாஈ யில் பாகம் 1 பக்கம் 388 லும் ஸஹீஹுத் திர்மிதியில் பாகம் 1 பக்கம் 131 லும் இடம்பெற்றுள்ளது.
12 ரக்அத்துக்கள் என்பது ராதிபான ஸுன்னத்துக்கள் அதாவது பர்ழான தொழுகைகளின் முன் பின் ஸுன்னத்துக்களை குறிக்கிறது.
அல் ஹதீஸுல் குத்ஸியில் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது :
"எனது அடியானை நான் நேசிக்கும் வரை (நபிளாலான) உபரியான வணக்கங்கள் மூலம் என்னை நெருங்கிக் கொண்டேயிருக்கிறான்.
(ஆதாரம் : புஹாரி . மேலும் பத்ஹுல் பாரி பாகம் 11 பக்கம் 340 பார்க்கவும்.)
மூன்றாவது :
நபிமார்களின் வரலாற்றை சிந்தித்தல், அதனை பின்பற்றி செயற்படும் நோக்கில் அதனை ஆய்வு செய்தல்.
இதற்கான ஆதாரம் அல்லாஹ்வின் பின்வரும் கூற்றாகும்,
"தூதுவர்களின் செய்திகளிலிருந்து உமது உள்ளத்தை உறுதிப்படுத்துவதை உமக்குக் கூறுகிறோம். இதில் சத்தியமும் நல்லுபதேசமும் நம்பிக்கையாளர்களுக்குப் படிப்பினையும் வந்துள்ளது"
(ஹூத் 120 ம் வசனம்)
இந்த வசனங்கள் யாவும் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இறங்கியது விளையாடி மகிழ்வதற்காக அல்ல! மாறாக

இதற்கென மிகப்பெரும் நோக்கம் உண்டு, அதுதான் நபியவர்களினதும் அவரோடு கூட உள்ள முஃமின்களினதும் உள்ளங்களை இம்மார்க்கத்தில் உறுதிப்படுத்துவதற்காகும்.
ஆகவே சகோதரரே! பின்வரும் அல்லாஹ்வின் கூற்றை சற்று நுனுக்கமாக சிந்திப்பீராக :
"அவர்கள், "நீங்கள் ஏதேனும் ஒன்றை செய்பவர்களாக இருந்தால், இவரை (இப்ராஹீம் நபியை) தீயிலிட்டு எறித்து உங்கள் தெய்வங்களுக்கு உதவி செய்யுங்கள்" என்று கூறினர்.
"நெருப்பே! இப்ராஹிமுக்கு குளிர்ச்சியாகவும் இதமாகவும் நீ ஆகிவிடு" என நாம் கூறினோம்.
அவர்கள் அவருக்கு சூழ்ச்சி செய்ய நாடினர், அச்சமயம் நாமோ அவர்களை பெரும் நஷ்டவாளர்களாக ஆக்கினோம்".
(அல் அன்பியா :68-70)
இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள் :
இப்ராஹீம் (அலை) அவர்கள் நெருப்பினுள் போடப்படும் போது அவர் கூறிய இறுதி வார்த்தை : "ஹஸ்பி(b)யல்லாஹு வநிஃமல் வகீல்" என்ற வார்த்தையாகும். (பொருள்: அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன், அவனே மிகச்சிறந்த பொருப்பாளனும் ஆவான்).
(பத்ஹுல் பாரி : பாகம் 8 பக்கம் 22)
மேற்படி இப்ராஹீம் (அலை) அவர்களின் கூற்றோடு தொடர்பான சம்பவம் கொடுங்கோன்மை மற்றும் துன்புறுத்துதல் போன்ற அத்துமீறல்களுக்கு முன் கொள்கையில் உறுதியோடு இருந்த ஒரு விடயத்தை உனது உள்ளத்தால் உணர்கிறாயல்லவா!
மூஸா (அலை) அவர்களின் சம்பவம் குறித்த பின்வரும் அல்லாஹ்வின் கூற்றை சற்று சிந்திப்பீராக!
"இரண்டு கூட்டத்தாரும் ஒருவரை ஒருவர் கண்டபோது மூஸாவின் தோழர்கள் 'நிச்சயமாக நாம் பிடிபட்டு விடுவோம்' என்று கூறினார்கள்.
அதற்கவர் "அவ்வாறன்று, நிச்சயமாக என்னுடன் என் இரட்சகன் இருக்கிறான், அவன் எனக்கு நேர்வழி காட்டுவான்" என்று கூறினார்".
(அஷ்ஷுஅரா :61-62)
இந்த சம்பவமும் எதிரிகள் துரத்தி வரும்போது அவர்கள் தங்களைப் பிடித்து விடுவார்கள் என்ற இக்கட்டான சூழ்நிலையில் ஈமானில் உறுதியற்று நம்பிக்கையிழந்தவர்களின் ஓலங்களுக்கு மத்தியில் ஈமானில் உறுதியாக இருந்து அல்லாஹ்வில் நம்பிக்கையை ஏற்படுத்தி கொள்கையில் உறுதியாக இருந்த ஒரு நிலையை எம்மால் உனரக் கூடியதாக உள்ளதல்லவா?!
அதே போல் பிர்அவ்னின் மந்திரவாதிகளான சூனியகாரர்களின் நிகழ்வை நாம் எடுத்துக்கொண்டால், சத்தியம் தெளிவானதன் பின் சத்தியத்தில் மிக உறுதியாக இருந்த சிறு குழுவுக்கு அது ஒரு முன்னுதாரணமாக திகழ்வதனை அவதானிக்க முடிகிறது.
ஒரு கொடுங்கோலனின் அச்சுறுத்தல்களுக்கு முன் அசையாத கொள்கை உறுதியுடன் இருந்தமைக்கான மிகப்பெரும் முன்மாதிரியை நீர் அதில் காணமுடிகிறதல்லவா?! அந்த சம்பவத்தை அல்லாஹ் பின்வருமாறு விவரிக்கிறான்:
"பிர்அவ்ன் அந்த முஃமின்களைப்பார்த்து : "நான் உங்களுக்கு அனுமதியளிப்பதற்கு முன்னர் நீங்கள் அவரை நம்பிக்கை கொண்டுவிட்டீர்களா? நிச்சயமாக அவரே உங்களுக்கு சூனியத்தைக் கற்றுத்தந்த உங்கள் ஆசான் ஆவார். எனவே, நிச்சயமாக நான் உங்களது கைகளையும், உங்களது கால்களையும், மாறாக (ஒரு பக்கத்துக் காலையும் மறு பக்கத்துக் கையையும்) துண்டிப்பேன், இன்னும், பேரீத்த மரத்தின் கம்பங்கள் மீது உங்களைச் சிலுவையில் அறைவேன். எங்களில் கடுமையாகத் தண்டிப்பவன் யார் என்பதையும் நிலையானவன் யார் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்" என்று பிர்அவ்ன் கூறினான்".
(தாஹா வசனம் 71)
அல்லாஹ்வை ஏற்றுக் கொண்ட முஃமின்களான அந்த சிறு குழுவினருக்கு பிர்அவ்னின் அச்சுறுத்தல்கள் எந்த சலனத்தையோ பின்னடைவையோ ஏற்படுத்தவில்லை, அவர்கள் இவ்வாறு உறுதியாக பதிலளித்தனர் :
"அதற்கவர்கள் "எம்மிடம் வந்த தெளிவான சான்றுகளையும் எம்மைப்படைத்தவனையும் விட உன்னை நாம் தேர்ந்ததெடுக்கமாட்டோம் . நீ வழங்கும் தீர்ப்பை வழங்கலாம். நீ தீர்ப்பளிப்பது இவ்வுலக வாழ்க்கையில்தான்" என்று அவர்கள் பிர்அவ்னிடம் கூறினார்கள்".
(தாஹா வசனம் 72)
இவ்வாறே ஸூறா யாஸீனில் இடம்பெற்றுள்ள அல்லாஹ்வை விசுவாசித்த முஃமினின் சம்பவம், பிர்அவ்னின் குடும்பத்தில் இறைவிசுவாசியின் சம்பவம், கிடங்கு வாசிகளின் சம்பவம் போன்ற ஏனைய சம்பவங்களும் இஸ்லாமிய மார்க்கத்தில் உறுதியாக

நிலைத்திருந்தமைக்கான நிகழ்வுகளாகவும், பல பாடங்களையும் படிப்பினைகளையும் உள்ளடக்கியதாகவும் இருப்பதை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

நான்காவது விடயம் :

பிரார்த்தனையாகும்

இம்மார்க்கத்தில் பற்றுறுதியை தருமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வது அல்லாஹ்வின் அடியார்களான முஃமின்களின் முக்கிய பண்புகளில் ஒன்றாகும். (மார்க்கத்தில் நிலையான உறுதியை வேண்டி பிரார்திக்க வேண்டிய சில பிரார்த்தனைகள் :)

'எங்கள் இறைவனே! நீ எங்களுக்கு நேர் வழியைக் காட்டியதன் பின் எங்கள் இதயங்களை (அதிலிருந்து) தடம் புறளச் செய்து விடாதே!".

"எங்கள் இரட்சகனே! நீ எங்கள் மீது பொறுமையைப் பொழிவாயாக! எங்கள் பாதங்களை உறுதியாக்குவாயாக!".

அதாவது

மனிதர்களின் உள்ளங்கள் யாவும் அர்ரஹ்மானாகிய அல்லாஹ்வின் விரல்களில் இரு விரல்களின் நடுவே ஒரே உள்ளத்தைப்போன்று இருப்பதால் அவன் அவற்றை நாடிய விதத்தில் திருப்பிவிடுகிறான்

(இமாம் அஹ்மத் மற்றும் இமாம் முஸ்லிம் இருவரும் இப்னு உமரின் ஹதீஸாக இதனைப்பதிவு செய்துள்ளனர்.

பர்க்க : இமாம் நவவியின் ஸஹீஹ் முஸ்லிமின் விரிவுரை பாகம் 16- பக்கம் :204)

நபி (ஸல்) அவர்கள் பின்வரும் துஆவை அதிகம் ஓதி பிரார்திப்பவர்களாக இருந்தார்கள் :

"உள்ளங்களைப் புரட்டுபவனே! எனது உள்ளத்தை உனது மார்க்கத்தில் நிலை பெறச் செய்வாயாக!".

அனஸ் (ரழி) அவர்களினால் அறிவிக்கப்பட்ட ஹதீஸ் திர்மிதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் திர்மிதியின் விரிவுரையான துஹ்பதுல் அஹ்வதி பாகம் 6 பக்கம் 349 லும் ஸஹீஹுல் ஜாமிஇல் 7864லும் இடம்பெற்றுள்ளது.

ஐந்தாவது :

அல்லாஹ்வை நினைவு கூறல்

அல்லாஹ்வை அதிமாக நினைவுகூர்வது, மார்க்கத்தில் உறுதியான நிலையை பெறுவதற்கான மிகப் பெறும் வழிமுறைகளில் ஒன்றாகும். மன உறுதியை பெற்றுத் தருவதில் இதன் பங்கு அளப்பரியது.

மார்க்கத்தில் உறுதியாக இருத்தல், அல்லாஹ்வை அதிகம் நினைவு கூறல் என்ற இரு விடயங்களையும் பின்வரும் வசனத்தில் அல்லாஹ் இணைத்து கூறியிருப்பதை சற்று சிந்திப்பீராக!

"நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் (யுத்தத்தின் போது எதிரியின்) கூட்டத்தைச் சந்தித்தால் உறுதியாக இருங்கள். இன்னும் நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு அல்லாஹ்வை அதிகம் நினைவு கூறுங்கள்".

(அல்அன்பால் வசனம் 45)

புனிதப் போரில் நிலைத்திருப்பதற்கு துணைசெய்யும் காரணிகளுள் அல்லாஹ்வை நினைவுகூர்தல் மிக முக்கிய அம்சம் என்பதை அல்லாஹ் மேற்படி வசனத்தில் குறிப்பிடுகிறான்.

ரோம மற்றும் பாரசீகர்களின் உடற்கட்டமைப்புகளைப் பற்றி சிந்தியுங்கள், மிக அவசியமான நேரத்தில் அவ்வுடற்கட்டமைப்பு அவர்களுக்கு எவ்வாறு துரோகமிழைத்தது என்பதை அவதானியுங்கள்.

அடைப்புக்குள் காணப்படுகின்ற கூற்றானது இமாம் இப்னுல் கைய்யிம் (ரஹ்) அவர்களின் நூலான அத்தாஉ வத்தவாஉ (பிணியும் மருந்தும் ) என்ற நூலிலிருந்து பெறப்பட்டதாகும்.

அவ்வாறான உடற்கட்டமைப்புடன் இருந்த அவர்களை குறைவான எண்ணிக்கையுடைய முஸ்லிம்கள் அல்லாஹ்வை அதிகம் அதிகம் திக்ர் செய்ததனால் அவர்களை வெற்றி கொள்ள வழிவகுத்தது.

யூஸுப் (அலை) அவர்கள் அழகும் அந்தஸ்துமிக்க ஒரு பெண்ணின் சோதனைக்கு முன்னால் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள யாரின் துணையை நாடினார்கள் ?

அவர்கள் அல்லாஹ்வின் பாதுகாப்பு எனும் கோட்டைக்குள் பிரவவேசிக்கவில்லையா? இதனால் மனோ இச்சைப்புயல்கள் அனைத்தும் அக்கோட்டையின் மதில்களிலேயே சுக்குநூறாகியதல்லவா?

இவ்வாறுதான் முஃமின்களை உறுதிப்டுத்துவதில் இறை நினைவின் தாக்க விளைவு காணப்படும்.

ஆறாவது :

ஒரு முஸ்லிம் சரியான பாதையை பின்பற்றிச் செல்வதில் ஆர்வம் காட்டுதல்.

ஒவ்வொரு முஸ்லிமும் பின்பற்றி நடக்க வேண்டிய சரியான ஒரே பாதை அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தினரின் பாதையாகும். அதுதான் வெற்றிபெற்றோரினதும் அல்லாஹ்வின் பாதுகாப்புப்பெற்ற பிரிவினரின் பாதையுமாகும். அத்துடன் இவர்களதான் தூய அகீதாவினதும், சரியான வழிமுறையினதும் (அனுகுமுறையினதும்) சொந்தக்காரர்கள். ஸுன்னாவையும் சரியான ஆதாரத்தையும் பின்பற்றுவோர். அல்லாஹ்வின் எதிரிகள் மற்றும் அசத்தியவாதிகளை விட்டும் தனித்துவம் பேணுவோர்.

சரியான பாதையை பின்பற்றிச் செல்வதில் ஆர்வம் கொள்ளுதல் என்ற இந்த வழிமுறையின் பெறுமானம் குறித்து சற்று நீ சிந்திப்பது அவசியம். இதன் முக்கியத்துவத்தை அறிய இவ்வாறான ஒரு கேள்வியை முன்வைக்க முடியும்! முன்னோர்களிலும் அதனை தொடர்ந்து வந்த பலரும் ஏன் வழிதவறிச்சென்றார்கள்? நேரான பாதையில் (அஹ்லுஸ்ஸுன்னாக்களின் கோட்பாட்டில்) அவர்களின் கால் பாதங்கள் நிலைத்திருக்காமல் ஏன் நிலை தடுமாறினார்கள்? இறுதியில் அப்பாதையில் அவர்கள் மரணிக்கவுமில்லை!

இவ்வாறு தடம்புறண்டு இருந்தோர் பெறுமதிமிக்க அவர்களின் காலங்களை வீணாக்கி விட்டு அவர்களின் ஆயுளின் இறுதிப்பகுதியில் சரியான பாதையில் பயணித்தோரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இதனால்தான் இவர்களில் ஒருவர் பித்அத், வழிகேடுகளில் படிப்படியாக ஒவ்வொரு நிலைக்கும் மாறுவதைப்பார்க்கலாம், பல்ஸபா எனும் தத்துவம் என்ற நிலையிலிருந்து இல்முல் கலாம் எனும் மெய் நிலை என்ற நிலைக்குச்செல்கிறார், பகுத்தறிவுவாதம் என்ற நிலையிலிருந்து அல்லாஹ்வின் வசனங்களைத் திரிவுபடுத்துகின்ற நிலைக்குச்செல்கிறார், அவனது வசனங்களுக்கு பிழையான வியாக்கியானம் கற்பிப்பதிலிருந்து மொத்தமாக அதன் உண்மையான அர்த்தங்களை மறுத்து நல் அமல்களுக்கும் ஈமானுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்ற நிலைக்குச்செல்கிறார், இவ்வாறே ஒவ்வொரு சூபித்தரீக்காக்களுக்கும் மாறி மாறிச்சென்று கொண்டிருக்கின்றார்,

இவ்வாறுதான் பித்அத்வாதிகள் ஓர் உறுதியான நிலையிலிருந்து விலகி தட்டுத்தடுமாறிக்கொண்டிருப்பர். (அஹ்லுல் கலாம்) அல்லாஹ்வின் மெய் நிலை தொடர்பாக பேசிய தத்துவவாதிகள் தங்களது மரணத்தருவாயில் எவ்வாறு உறுதியற்று நிலை குலைந்து போனார்கள் என்பதைச் சிந்தித்துப்பார்! இவர்களின் மரண நிலை குறித்து ஸலபுகளான நன்னெறி நடந்த முன்னோர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள் :

அஹ்லுல் கலாம்களே அல்லாஹ்வின் விடயத்தில் மரணத்தின் போது அதிக சந்தேகத்துடன் காணப்பட்டார்கள்

ஆனால் அஹ்லுஸ்ஸுன்னாவைச் சேர்ந்த ஒருவர் வெறுப்பினால் அஹ்லுஸ்ஸுன்னாக்களின் வழிமுறை குறித்து அறிந்து விளங்கி அதன் படி செயலாற்றியதன் பின் தடம் புரண்டு பித்அத் வாதிகளின் வழிமுறையின் பால் மீண்டுள்ளாரா? என சிந்தித்துப்பார்!

இவ்வாறு சரியான பாதையை விட்டுச் செல்வது சில வேளை நிகழலாம். ஒருவர் தனது மனோ இச்சைகளுக்காகவும் (ஷைதானிய) ஆசைகளுக்காகவும் விட்டுவிடலாம். அல்லது அவரது பலவீனமான புத்திக்கு தோன்றும் சந்தேகங்களுக்காகவும் அதை விட்டுவிடலாம். ஆனால் அஹ்லுஸ் ஸுன்னாக்களின் பாதையை விட தான் செல்லும் பாதை மிகச்சரி எனக் கண்டதாலோ, அல்லது தவறு எனத் தெளிவாகியதாலோ ஒரு போதும் அதனை விட்டுவிட மாட்டார்.

இதன் உண்மையை நபி முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்றியவர்கள் குறித்து ஹிரக்ல் அபூஸுப்யானிடம் விசாரணை செய்த நிகழ்வின் மூலம் எம்மால் அறிந்து கொள்ள முடியும்,

ஹிரக்ல் அபூஸுப்யானைப் பார்த்து இவ்வாறு கேட்டார் :

அவரின் மார்க்கத்தில் நுழைந்த பின் அதன் மீது அதிருப்தியுற்று யாரேனும் மதம் மாறியிருக்கின்றனரா?' என்று கேட்டார்

அதற்கு அபூஸூப்யான் இல்லை என்று பதிலளித்தார்.

இதற்கு ஹிரக்ல் அவரிடம்

அப்படித்தான் இறை நம்பிக்கை இதயத்தின் ஆழத்தில் கலந்து விட்டால் அது ஆழமாக பதிந்து விடும் என்று கூறினார்.

(ஆதாரம்: புஹாரி, பத்ஹுல் பாரி பாகம் 1 பக்கம் 32)

பித்அத் முகாம்களிலிருந்து அஹ்லுஸ்ஸுன்னாக்களின் கொள்கைக்கு திரும்பியோர்கள் அவர்களின் முன்னைய கொள்கை பற்றி அதிருப்தியுடன் கடிந்து கொண்டுள்ளார்கள் என்பதைச் செவியுற்றிருக்கின்றோம், ஆனால் இதற்கு மாற்றமாக

அஹ்லுஸ்ஸுன்னாக்களில் யாராவது பித்அத்வாதியாக சென்று இவ்வாறு நடந்து கொண்டதை செவிமடுத்ததுண்டா?
ஆகவே மார்க்கத்தில் உறுதியாய் இருக்க உண்மை முஃமின்களின் வழிமுறையை பின்பற்றி நடப்போம்.
ஏழாவது வழிமுறை :
ஈமானியப் பயிற்றுவிப்பு.
படிமுறையின் அடிப்படையிலமைந்த, விழிப்புணர்வு மிக்க, அறிவை மையமாகக்கொண்ட ஈமானியப் பயிற்சி மார்க்கத்தில் உறுதியாக இருப்பதற்கு மிக முக்கிய காரணியாக இருக்கிறது.
அல் குர்ஆன் மற்றும் ஸுன்னாவிலிருந்து தூரமாகி மனித வாக்குகளில் முழுமையாக மூழ்கியிருப்பதன் விளைவாக ஏற்படுகின்ற ஆன்மீக வரட்சிக்கு முரணாக அல்லாஹ்வைப் பற்றிய அச்சம், அவனை நேசித்தல், அவனிடம் ஆதரவு வைத்தல் போன்றவற்றின் மூலம் உள்ளத்திற்கும் மனசாட்சிக்கும் புத்துயிரளித்தலையே ஈமானியப்பயிற்சி எனப்படுகின்றது.
அறிவை மையமாகக்கொண்ட பயிற்சி என்பது சரியான ஆதாரத்தின் அடிப்படையில் அமையக் கூடிய பயிற்சி ஆகும். பிறரைப் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவது, எந்த சிந்தனையும் இன்றி மற்றவரை சார்ந்திருப்பது போன்ற விடயங்களுக்கு முரணானது.
விழிப்புணர்வு ரீதியான பயிற்சி என்பது குற்றம் புரிவோரின் வழியில் செல்லாமல், இஸ்லாத்தின் எதிரிகளின் திட்டங்களைப்படித்து, சிறிய, வரையறுக்கப்பட்ட சூழல்களுக்குள் முடங்கி அடைந்து போகாமல் கலத்தின் நிகழ்வுகளைத் தெளிவாக விளங்கி மதிப்பீடு செய்யும் நிலையைக் குறிக்கிறது
படிமுறைப்பயிற்சி என்பது ஒரு முஸ்லிமை அவனது சக்திக்கேற்ப படிப்படியாக உயர் படித்தரங்களின் பால் இட்டுச்செல்வதைக்குறிக்கும். தகுந்த முன்னேற்பாடின்மை, அவசரப்படுதல், குறுக்கு வழியில் செல்லுதல் ஆகியவற்றிற்கு நேர் மாற்றமானதாகும்.
இப்பயிற்சியின் முக்கியத்துவத்தை அறிய வேண்டுமாயின் நபியவர்களின் (ஸீறாவின்) வாழ்க்கை வரலாற்றின் பக்கம் திரும்புவோம். அப்போது நாங்களே எங்களை கேள்விக்குட்படுத்திக் கொள்வோம்.
நபிகள் (ஸல்) அவர்களின் தோழர்கள் மக்காவில் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்ட காலப்பகுதியில் அவர்கள் இஸ்லாத்தில் நிலைத்திருக்க அடிப்படையாக இருந்தது என்ன?
பிலால், ஹப்பாப், முஸ்அப், யாஸிரின் குடும்பத்தவர்கள் மற்றும் ஏனைய பலவீனமான நிலையிலிருந்த நபித்தோழர்கள் (ரழியல்லாஹு அன்ஹும்) பலத்த துன்பங்களை அனுபவித்தும் ஈமானில் தடம்புரலாது உறுதியோடு இருந்தது எப்படி?. மேலும் மூத்த ஸஹாபாக்கள் கூட அபூதாலிப் பள்ளத்தாக்கில் சிறைவைக்கப்பட்ட வேளையில் அவர்களும் ஈமானில் உறுதியோடு இருந்தது எப்படி?
மார்க்கத்தில் இவ்வாறான உறுதியை பெறுவதற்கு நபித்துவ ஒளியிலிருந்து கிடைத்த ஆழமான 'தர்பியா' பயிற்சியன்றி இது சாத்தியமாகுமா? நுபுவ்வத்தின் வழிகாட்டலே அவர்களின் ஆளுமையை செம்மைப்படுத்தி அவர்களை மார்க்கத்தில் திட உறுதியோடு இருக்க வழிவகுத்தது!
உதாரணத்திற்கு, ஹப்பாப் இப்னுல் அரத் (ரழி) அவர்களை எடுத்துக் கொள்வோம், சத்தியத்தை ஏற்றதற்காக அவர்களின் எஜமானர்கள் இரும்புப் பாளங்களை நெருப்பில் பழுக்கக் காய்ச்சி அதனை அவர்களை வெற்று முதுகில் தூக்கிப் போட்டார்கள், அந்நேரம் அவர்களுடைய முதுகில் கொழுப்பு உருகி அந்நெருப்பை அணைத்தது. இவை அனைத்தையும் தாங்கிக் கொண்டு அவர்களைப் பொறுமையுடன் இருக்கச் செய்தது எது?
அதே போல் பிலால் (ரழி) அவர்களை சுடுமணலில் கிடத்தி அவர்கள் மீது பெரும் பாராங்கல்லைத் தூக்கி வைத்து கடுமையாகத் துன்புறுத்தியபோதும் ஸுமையா (ரழி) அவர்களை சங்கிலிகளாலும் விலங்குகளாகும் கட்டி வதை செய்த போதும் அவர்களை நிலைகுழையாமல் இருக்கச் செய்தது எது?
அது மட்டுமா! மதீனா கால கட்டத்தில் நடந்த நிகழ்விலிருந்து தோன்றும் இன்னொரு முக்கிய கேள்வி, ஹுனைன் யுத்தத்தின் போது அதிகமான முஸ்லிம்கள் தோழ்வியுற்றும் நபியவர்களுடன் கூடவே இருந்து உறுதியாக போராடியது யார்?
அவர்கள் புதிதாக இஸ்லாத்தை வாழ்க்கைநெறியாக ஏற்றுக்கொண்டவர்களா? அல்லது நபியவர்களின் பாசறையில் போதுமான பயிற்சியை பெறாது போர்பொருட்களை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் சென்றவர்களா? என்று நாம் பார்த்தால் இவர்கள் எவருமில்லை என்பதே பதிலாகக் கிடைக்கும்.
மாறாக நபியவர்களுடன் உறுதியாக நின்று போராடியோர்களில் அதிகமானோர் நபியவர்களின் பாசறையில் அதிகளவு பயிற்சியை பெற்ற உண்மை முஃமின்களே.

நபியின் சிறந்த பயிற்சி அந்நபித்தோழர்களுக்கு இல்லாதிருந்தால் அவர்களின் உள்ளத்தில் இறை நம்பிக்கை ஆழமாகவும் உறுதியாகவும் வேறூன்றியிருக்க முடியுமா? என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

எட்டாவது :

தான் பயணிக்கும் பாதை குறித்த ஆழமான நம்பிக்கை

ஒரு முஸ்லிம் தான் செல்கின்ற பாதை சரியானது என்ற நம்பிக்கை அதிகரிக்கும் போது அப்பாதையில் அவர் மிக உறுதியுடனுடன் நம்பிக்கை தளராது இருப்பார் என்பதில் ஐயமில்லை. இந்த நம்பிக்கை அதிகரிப்பதற்கு சில வழிமுறைகள் உண்டு. அவை பின்வருமாறு :

1) சகோதரரே- நீ பயணிக்கும் இப்பாதையானது புதியதோ அல்லது உமது காலத்திலோ அல்லது நீ வாழும் நூற்றாண்டிலோ தோன்றியது அல்ல என்பதை உணர்தல் வேண்டும்.

இப்பாதை தொன்மை வாய்ந்த நேரிய பாதையாகும், உனக்கு முன் வந்த நபிமார்கள், உயிர்த்தியாகிகள், சான்றோர்கள், உத்தமர்கள், மார்க்க அறிஞர்கள் ஆகியோர் அனைவரும் இப்பாதையில்தான் சென்றுள்ளனர் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு புரிந்து இப்பாதையில் செல்லுகையில் தனித்துவமானவனாய் மாறிவிடுவாய். ஏனெனில் அவர்கள் (நபிமார்கள், நல்லோர்கள்) யாவரும் இப்பாதையில் உன் சகோதரர்களாக இருக்கின்றார்கள் என்ற உள் உணர்வு உனக்கு இருப்பதால் அதன் விளைவாக தனிமை நீங்கி பிரியம் ஏற்படும், கவலை சந்தோஷமாக மாறிவிடும்.

2) இந் உயரிய நேர்வழிக்காக அல்லாஹ் உம்மை விஷேடமாக தெரிவு செய்திருக்கிறான் என்ற உணர்வு

இது குறித்து அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான்:

"அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவன் தேர்ந்தெடுத்துக் கொண்ட அவனது அடியார்கள் மீது சாந்தி உண்டாவதாக".

(அந்நம்ல்: 59)

மேலும் அல்லாஹ் குறிப்பிடுகிறான் :

"பின்னர் நமது அடியார்களில் நாம் தேர்வு செய்தோரை அவ்வேதத்திற்கு உரித்துடையோராக்கினோம்".

(பாதிர் :32)

மேலும் அல்லாஹ் குறிப்பிடுகிறான் :

"இவ்வாறு உமது இரட்சகன் உம்மை தேர்வு செய்து கனவுகளின் விளக்கத்தை உமக்கு கற்றுத்தருவான்".

(யூஸுப் வசனம் 6)

அல்லாஹ் நபிமார்களை தெரிவு செய்ததைப் போல் ஸாலிஹீன்களான நன்மக்களுக்கும் அத்தேர்வில் பங்குண்டு, அதுவே நபிமார்களின் அறிவிலிருந்து அவர்கள் அனந்தரமாகப்பெற்றது. (எனவே இத்தெரிவில் நீயும் ஒருவராக இருப்பது என்று உணர்வது இம்மார்க்கத்தில் நிலைத்திருப்பதற்கான வழிமுறைகளுள் ஒன்றாகும்)

அல்லாஹ் உன்னை சடப்பொருளாகவோ அல்லது விலங்கினமாகவோ நாத்தீக இறைமறுப்பாளனாகவோ அல்லது பித்அத்தின் பக்கம் அழைப்பவனாகவோ அல்லது தீயவனாகவோ அல்லது இஸ்லாத்தின் பால் மற்றவர்களை அழைக்காத ஒரு முஸ்லிமாகவோ அல்லது தவறுகள் நிறைந்த பாதையின் பால் அழைப்பவனாகவோ படைத்திருந்தால் உன் உணர்வு எப்படியிருக்கும்?

அல்லாஹ் உன்னை சிறந்தவனாக தேர்ந்தெடுத்து நபி (ஸல்) அவர்களும் நபித்தோழர்களும் சென்ற சத்தியப் பாதையில் அழைப்பாளனாக உன்னை ஆக்கியிருக்கும் பாக்கியத்தை உணர்வது இந்தக் கொள்கையில் உறுதியோடு இருப்பதற்கான காரணிகளில் ஒன்றாகுமல்லவா?

ஒன்பதாவது :

அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் தஃவாப் பணியில் ஈடுபடல்

உள்ளம் செயல்படாது இயங்காது இருந்தால் தேங்கி நிற்கும். நீரைப்போல் அது மாசுபட்டு அசுத்தமாகிவிடும்.

எனவே உள்ளம் செயல்படுவதற்குச் மிக உயர்ந்த களம் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைத்துக் கொண் டிருப்பதாகும். இப்பணி இறைத்தூதர்களின் பணியாகும். மட்டுமல்லாது ஆன்மாவையும் அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து அது பாதுகாக்கிறது, இதன் மூலமே மனித ஆற்றல்கள் வெடித்து முக்கிய பணிகள் நிறைவேறிக்கொண்டிருக்கின்றன.

இதனால்தான் அல்லாஹ் நபியவர்களை நோக்கி பின்வருமாறு குறிப்பிடுகிறான் : "எனவே நீ இதற்காகவே அவர்களை அழைத்து நீ ஏவப்பட்ட பிரகாரம் உறுதியாக இருப்பீராக!".

ஒரு மனிதர் பற்றி நாம் அவரில் எந்த முன்னேற்றத்தையோ பின்னடைவையோ காண முடியாதுள்ளது என்று கூறுவதில் உண்மை கிடையாது. (மாறாக அவரை நல் வழியின் பால் அழைக்காது இருந்தால் அவர் சரியான பாதையிலிருந்து வழி தவறிவிடுவார்,) உமது உள்ளத்தைக் கூட நல்ல காரியங்களில் நீ ஈடுபடுத்த வில்லையெனில் அது உம்மை பாவத்தில் ஈடுபடுத்தி விடும்.

இறைநம்பிக்கை (நன்மை செய்யும் போது) கூடவும் செய்யும், (பாவங்களின் போது) குறையவும் செய்யும்.

நேரத்தை செலவிட்டு, தூரநோக்குச் சிந்தனையோடு உடல் உழைப்பால் தெளிவான முறையில் சரியான வழிமுறையின் பால் மக்களை அழைப்பதும், அதனையே ஒரு முஸ்லிம் தனது குறிக்கோளாகவும் தொடர் வேலையாகவும் ஆக்கிக்கொள்வதும், மக்களைக் குளப்புத்துக்குள்ளாக்கி வழிகெடுப்பதற்கான ஷைதானின் முயற்சிகளைத் தடுப்பதற்கு மிகப்பெரும் உபாயமாகத் திகழ்கிறது.

அத்துடன் தஃவா பணியில் ஈடுபடும் போது ஒரு (தாஈ) அழைப்பாளன் எதிர்கொள்கின்ற தடைகள் மற்றும் அசத்திய வாதிகள், அசத்தியத்தில் முரண்டுபிடிப்போரின் இடையூறுகளின் மூலம் அவரது ஈமான் உயர் நிலையை அடைவதுடன் அவரின் உறுதியும் மென்மேலும் அதிகரிக்கிறது.

எனவேதான், அழைப்புப் பணிக்கு மகத்தான கூலி இருப்பதுடன் அது நிலைதடுமாறாது உறுதியாக இம்மார்க்கத்தில் பற்றுறுதியுடன் இருப்பதற்கான சாதனங்களுள் ஒன்றாகவும், பின்வாங்கிச்செல்லல் சோர்வடைதல் போன்றவைகளில் இருந்து தற்காத்துக்கொள்ளவும் உதவுகிறது.

ஏனெனில் போர்க்களத்தில் துணிவுடன் முன்னேறிச் சென்று தாக்கக்கூடியவனுக்கு தற்காப்புத் தேவைப்படாது!

காரணம் அல்லாஹ் அழைப்பாளர்களுடன் இருக்கின்றான், அவர்களை அவன் அப்பணியில் உறுதிப்படுத்துகின்றான், அவர்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு எட்டுக்களையும் சீராக்குகின்றான். அழைப்புப் பணியில் ஈடுபடுபவர் தன் அனுபவத்தாலும், அறிவாலும் நோயை எதிர்த்துப் போராடும் ஒரு மருத்துவரைப் போன்றவர், மற்றவர்களிடம் அதை எதிர்த்துப் போராடுவதன் மூலம், அவர் மற்றவர்களை விட அந்த நோயிலிருந்து தற்காத்துக் கொள்ளும் விடயத்தில் மிக அவதானமாக இருக்கிறார்.

பத்தாவது :

மார்கத்தில் பற்றுறுதியுடன் இருக்கும் முக்கிய நபர்களுடன் (புள்ளிகளுடன்) சேர்ந்து இருத்தல்,

இவ்வழிமுறையின் பண்புகள் குறித்து நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள் :

மக்களில் சிலர் நன்மைகளின் திறவு கோல்களாகவும் தீமைகளின் பூட்டுக்களாகவும் திகழ்கின்றார்கள்.'

(இந்த ஹதீஸின் தரம் ஹஸன் ஆகும். இது இப்னுமாஜாவில் அனஸ் (ரழி) அவர்களின் ஹதீஸாகவும் (237), இப்னு அபீ ஆஸிம் அவர்களின் அஸ்ஸுன்னா என்ற நூலில் பாகம் 1 பக்கம் 127லும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் அஸ்ஸில்ஸிலா அஸ்ஸஹீஹாவில் 1332 பார்க்கவும்.)

எனவே, முன்மாதிரிக்க உலமாக்கள், சான்றோர்கள் மற்றும் ஈமானின் உயர்நிலையிலுள்ள அழைப்பாளர்கள் ஆகியோரைத் தேடிச் செல்வதும், அவர்களின் அவையில் அமர்வதும் சத்தியத்தில் பற்றுறுதியுடன் நிலைத்திருப்பதற்கான முக்கிய காரணியாகும்.

வரலாற்றில் பல குழப்பமான நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. அவ்வேளை சில மனிதர்களின் உறுதியான நிலைப்பாட்டினாலும் மார்க்க உறுதியினாலும் முஸ்லிம்களை தடம்புரலாது அல்லாஹ் பாதுகாத்துள்ளான்.

இது குறித்து அலி இப்னுல் மதீனி (ரஹ்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள் :

இஸ்லாமிய வரலாற்றில் நிகழ்ந்த அகீதாவுக்கெதிரான மிக முக்கிய நிகழ்வுகளான நபியவர்களின் வபாத்திற்குப்பின் நடந்த அரபியர்களின் மத மாற்றம் தொடர்பான (ரித்தத்) பிரச்சினையை அபூபக்ர் (ரழி) அவர்களின் மூலம் தீர்த்து அல்லாஹ் இம்மார்க்கத்தை கண்ணியப்படுத்தினான். அதே போல், அல்குர்ஆன் படைக்கப்பட்டது என்ற கருத்தியலை ஏற்க வேண்டும் என்ற பிரச்சினைக்கெதிராக இமாம் அஹ்மத் அவர்கள், வரலாற்றில் சோதனை நாள் என்று அழைக்கப்படும் அந்நாளில் எதிர்த்து நின்றதன் மூலம் இம் மார்க்கத்தை அல்லாஹ் கண்ணியப்படுத்தினான்.

ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமியா அவர்கள் கொள்கையில் உறுதியோடு நிலை தடுமாறாது இருந்தது குறித்து அவரது மாணவர் இப்னுல் கைய்யிம் (ரஹ்) குறிப்பிடுவதை சற்று சிந்தித்துப் பாருங்கள் :

எங்களை அச்சமும் அவநம்பிக்கையான எண்ணங்களும், நெருக்கடிகளும் ஆட்கொண்டு அவைகள் தீவிரமடையும் வேளை நாம் அவரிடம் வருபவர்களாக இருந்தோம். அவரைப் பார்த்து அவருடைய வார்த்தைகளைக் கேட்டதும், நம்மை ஆட்கொண்ட அனைத்தும் எம்மை விட்டு நீங்கி, உள்ளத்தில் மகிழ்ச்சியும், வலிமையும், உறுதியும், அமைதியும் நிறைந்து காணப்பட்டது. தன்னை சந்திக்க முன் தனது அடியார்களைத் தனது சுவன பதிக்கு சாட்சியமாக்கி, அமல் செய்யும் இவ்வுலகில் அவர்களுக்கு அதன் வாயில்களைத்திறந்து கொடுத்து, அதன் சுகத்தையும் இன்பத்தையும் அடைய போட்டி போடுவதற்கான முழு சக்தியையும் அவர்களுக்கு கொடுத்த அல்லாஹ்வே மிகத்தூய்மையானவன் என அவனைப் போற்றித் துதிக்கின்றேன்"

(அல்வாபிலுஸ்ஸைய்யிப் பக்கம் :97)

இங்குதான் இஸ்லாமிய சகோதரத்துவம் மார்க்கத்தில் உறுதியாக இருப்பதற்கான ஒரு அடிப்படை போன்று வெளிப்படுவதை நாம் அவதானிக்கிறோம். உமது நல்ல முன்மாதிரிக்க சகோதரர்களும், பயிற்றுவிப்பாளர்களும் எப்போதும் -அல்லாஹ்வுக்குப் பிறகு- நீ பயணிக்கும் இஸ்லாமிய கொள்கையில் உறுதியை ஏற்படுத்துவதற்கு உறுதுணையாக இருப்பவர்கள். மேலும் நீ எப்போதும் சார்ந்திருக்க வேண்டிய மிகப்பலமான தூண்களாகவும் இவர்கள் உள்ளனர். அவ்வாறு அவர்களுடன் இருக்கும் போது இறை வசனங்கள் மற்றும் சுன்னாவின் போதனைகளை நினைவூட்டி உம்மை நேரான பாதையில் நிலைத்திருக்கச்செய்ய வழிகாட்டுவார்கள்.

ஆதலால் தனிமையில் இருப்பதைத் தவிர்ந்து அவர்களுடன் சேர்ந்திருப்பீராக. அவர்களின் தயவில் வாழ்வீராக, காரணம் தனிமையில் இருப்போரையே ஷைத்தான் தீண்டுகிறான். ஆட்டுமந்தையை விட்டு தூரமாகி தனிமையில் செல்லும் ஆட்டைத் தான் ஓநாய் பிடித்து சாப்பிடுகிறது.

பதினோராவது :

அல்லாஹ்வின் உதவியிலும், எதிர்காலம் இஸ்லாத்திற்குரியது என்றும் திடமான நம்பிக்கை கொள்ளல்.

இறையுதவி தாமதமாகின்ற போதே மார்க்கத்தில் அதிகம் உறுதியாக இருப்பதற்கான மிக அத்தியாவசியத் தேவையில் இருக்கிறோம், இல்லாவிட்டால் நேர்வழியில் உறுதியாக இருந்துவிட்டு வழிகேட்டுக்குச்செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிடும் (அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக)

இது குறித்து அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான் :

"மேலும் எத்தனையோ நபிமார்களுடன் இணைந்து அவர்களை பின்பற்றிய பலரும் போர் புரிந்துள்ளனர். அல்லாஹ்வின் பாதையில் அவர்களுக்கு ஏற்பட்ட (துன்பத்திற்காக) அவர்கள் மனம் தளரவோ பலவீனப்பட்டவோ அசத்தியத்திற்கு அடிபணியவோ இல்லை. மேலும் அல்லாஹ் பொருமையாளர்களை நேசிக்கிறான்.

எங்கள் இரட்சகனே! எங்கள் பாவங்களையும் எமது காரியங்களில் வரம்பு மீறலையும் மன்னித்து, எமது பாதங்களை பலப்படுத்தி, நிராகரிப்பாளர்களான இக்கூட்டத்திற்கு எதிராக எமக்கு உதவி செய்வாயாக!" என்று கூறுவதே அவர்களின் வார்த்தையாக இருந்தது.

ஆதலால் அல்லாஹ் அவர்களுக்கு இவ்வுலகத்தின் நன்மையையும், மறுமையின் அழகான நன்மையையும் வழங்கினான். அல்லாஹ் (இத்தகைய) நல்லவர்களையே நேசிக்கின்றான்."

(ஆல இம்ரான் வசனங்கள் : 146-148)

அல்லாஹ்வின் தூதர் அவர்கள், இறை நிராகரிப்பாளர்களால் துன்புறுத்தப்பட்டு இன்னல்களுக்கு உட்படுத்தப்பட்ட தமது தோழர்களை இம்மார்க்கத்தில் நிலைப்படுத்துவதற்காக அவர் கூறிய வார்த்தை எதிர்காலம் இஸ்லாத்திற்குரியது என்பதாகும், அதனை இவ்வாறு கூறினார்கள்.

புஹாரியில் ஹப்பாப் (ரழி) அவர்களால் அறிவிக்கப்பட்ட ஹதீஸில் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது :

"அல்லாஹ்வின் மீதாணையாக! இஸ்லாத்தை அல்லாஹ் நிச்சயம் முழுமைப்படுத்துவான். எந்தளவிற்கெனில் வாகனத்தில் பயணம் செய்யும் ஒருவர் யமனிலுள்ள ஸன்ஆ என்ற இடத்திலிருந்து ஹழரமூத் வரை எவ்வித அச்சமுமின்றி அல்லாஹ்வுக்கு மாத்திரம் பயந்தவராக பயணம் செய்வார். தனது ஆட்டு மந்தைகளின் மீது ஓநாயைத் தவிர வேறு எதற்கும் பயப்படமாட்டார்.

(ஆதாரம் : புஹாரி . மேலும் பத்ஹுல் பாரி பாகம் 7 பக்கம் 165 பார்க்கவும்.)

எனவேதான், எதிர் காலம் இஸ்லாத்திற்குரியதே என்ற நன்மாறாய செய்திகளை வளர்ந்து வரும் இளைஞர்களுக்கு எடுத்துச்சொல்வது அவர்களை ஈமானில் உறுதியோடு இருக்க பயிற்றுவிப்பதற்கு மிக முக்கிய அம்சமாக இருக்கிறது.
பன்னிரண்டாவது :
அசத்தியத்தின் யதார்த்த நிலையை அறிந்து, அதில் மதி மயங்கி ஏமாறாதிருத்தல்.
அல்லாஹ் இந்நிலையை எச்சரித்து பின்வருமாறு கூறுகிறான் :
"நிராகரிப்பாளர்கள் உலகின் பல பாகங்களிலும் உல்லாசமாகத் (சுற்றித் ) திரிவது உம்மை மதிமயக்கி விட வேண்டாம்".
(ஆல இம்ரான் : 196)
இவ்வசனம் இறைநிராகரிப்பாளர்களின் தற்காலிக சுகபோகங்களையும் உயர் நிலைகளையும் முஃமின்கள் பார்த்து ஏமாறுவதைவிட்டு எச்சரிப்பதுடன் அவர்களுக்கு ஆறுதலாகவும் நம்பிக்கை ஏற்படுத்தி இம்மார்க்கத்தில் உறுதியாக நிலைத்திருப்பதற்கும் வழிகாட்டுகிறது.
தொடர்ந்தும் அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான் :
"(வெள்ளத்தில் செல்லும்) நுரையோ பயனற்று அழிந்து போகிறது".
(அர்ரஃத் வசனம் : 17)
அசத்தியத்தியத்திற்கு பயந்து அதற்கு தலைவணங்கக் கூடாது என்ற படிப்பினையை அறிவுடையோருக்கு இவ்வசனம் குறிப்பிடுகிறது.
சத்தியவாதிகளான முஃமின்கள் இம்மார்க்கத்தில் நிலைத்திருப்பதை நோக்காகக் கொண்டு, அசத்தியவாதிகளை அம்பலப்படுத்தி அவர்களின் இலக்குகள் மற்றும் வழிமுறைகளை தத்ரூபமாக எடுத்து காட்டுவது அல்குர்ஆனின் போக்குகளில் ஒன்றாகும். அல்லாஹ் இது குறித்து இவ்வாறு குறிப்பிடுகிறான் :
"இவ்வாறே குற்றவாளிகளின் பாதை எத்தகையது என்பது தெளிவடைவதற்காக வசனங்களை நாம் தெளிவுபடுத்துகிறோம்".
(அல்அன்ஆம் வசனம் : 55)
இவ்வாறு அசத்தியவாதிகளின் பாதை குறித்து தெளிவுபடுத்துவதன் நோக்கம் யாதெனில் முஸ்லிம்கள் தாங்கள் அறியாத விதத்தில் குற்றம் பிடிக்கப்படாமல் இருப்பதற்கும் இந்த சத்திய மார்க்கமான இஸ்லாம் எங்கிருந்து அவர்களுக்கு கிடைத்தது என்பதை உணர்த்துவதற்காகவுமாகும்.
அதாவது, எதிரிகளின் சதிகள் குறித்த அறியாமையின் காரணமாக, தாங்கள் எதிர்பார்க்காத முறையில் பல பிரச்சினைகளும் குழப்பங்களும் வரும்போது இயக்கங்கள் வீழ்ச்சியுற்று இஸ்லாமிய அழைப்பாளர்களில் பலர் உறுதியை இழந்து நிலை குழைந்து போன நிகழ்வுகளை நாம் எத்தனை முறை கேள்விப் பட்டிருக்கிறோம், பார்த்திருக்கிறோம். ஆகையால் எதிரிகளின் திட்டங்கள், சதிகள் குறித்து அறிந்து இம்மார்க்கத்தில் உறுதியோடு நிலையாக நிற்பதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.
பதின் மூன்றாவது :
உறுதிப்பாட்டிற்கு உதவும் நற்குணங்களை ஒன்றுசேர்த்திருத்தல்
இவற்றில் தலையாயது பொறுமை, புஹாரி முஸ்லிமின் ஹதீதில் பின்வருமாறு வந்துள்ளது :
பொறுமையை விடச் சிறந்த விசாலமான அருட்கொடை எவருக்கும் கொடுக்கப்படுவதில்லை'.
ஆதாரம்: புஹாரி, பிரிவு : ஸகாத் - தலைப்பு : யாசிப்பதை தவிர்த்து சுயகௌரவத்துடன் இருத்தல்- முஸ்லிம் -கிதாபுஸ்ஸகாத் – தலைப்பு : பொறுமை மற்றும் சுயகௌரவத்தைப் பேணி இருத்தலின் சிறப்பு.
பொறுமையின் கடுமையான நிலை ஆரம்பத்தில் ஏற்படும் அதிர்ச்சியின் தாக்கத்தில் உள்ளது. எதிர்பாராது ஒரு விடயம் மனிதனுக்கு ஏற்பட்டால் அவனில் தடுமாற்றம் ஏற்படுகிறது. அவ்வேளை அவன் பொறுமையிழந்து விடுவானானால் அவனின் மார்க்கத்தில் இருந்த உறுதி அவனை விட்டு நீங்கி விடுகிறது.
இப்னுல் ஜவ்ஸி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுவதை சற்று சிந்தியுங்கள் :
அவர் கூறுகிறார் : நான் என்பது (80) வயது மதிக்கத்தக்க ஒரு மனிதரை கண்டேன், அவர் ஜமாஅத் தொழுகையை பேணித் தொழுபவராக இருந்தார், திடீரென அவரின் மகளின் ஆண் குழந்தை மரணித்துவிட்டது, அவ்வேளை அவர், யாரும் அவருக்கு துஆக் கேட்கத் தேவையில்லை, அதனை அல்லாஹ் ஏற்றுக்கொள்ளவும் மாட்டான், அல்லாஹ் எங்களுடன் முரண்டாக நடந்து கொள்கிறான், எங்களுக்கென்று ஆண்குழந்தை எவரையும் அவன் விட்டு வைப்பதாக இல்லை என்று கூறினார்.
(இப்னுல் ஜவ்ஸி அவர்களின் 'அஸ்ஸபாது இன்தல் மமாத்' பக்கம் 34)

இவர் கூறிய இவ்வார்த்தையை விட்டும் அல்லாஹ் மிகத்தூய்மையானவனும் உயர்ந்தவனுமாவான்.
முஸ்லிம்கள் உஹுத் யுத்தத்தில் பாதிக்கப்பட்டபோது அவர்கள் அப்பேரழிவை எதிர்பார்த்திருக்கவில்லை. காரணம், அல்லாஹ் அவர்களுக்கு வெற்றியை வாக்களித்திருந்தான். இதன் மூலம் உயிர்களாலும் தியாகிகளினாலும் கடுமையான ஒரு பாடத்தை அவர்களுக்கு கற்பித்தான்.
"உங்களுக்கு உஹுதில் ஒரு துன்பம் ஏற்பட்டது போன்று இருமடங்கை அவர்களுக்கு பத்ரில் நீங்கள் ஏற்படுத்தியிருக்க இது எப்படி நிகழ்ந்தது எனக் கேட்கின்றனர். அது உங்களால்தான் நிகழ்ந்தது என நபியே நீங்கள் கூறுவீர்களாக".
(ஆல இம்ரான் : 165)
அவர்களின் மூலம் என்ன நிகழ்ந்தது ?
"நீங்கள் விரும்புவதை அவன் உங்களுக்கு காண்பித்த பின்னர் நீங்கள் நபி நிறுத்தி வைத்திருந்த இடத்திலிருந்து கீழிறங்கி மாறுசெய்து இவ்விடயத்தில் தர்கித்ததால் தளர்ந்து போனீர்கள். உங்களில் இவ்வுலகத்தை விரும்புவோரும் இருக்கின்றனர்".
பதினான்காவது :
சான்றோர் அறிவுரை
அல்லாஹ் மனிதனின் மார்க்க நிலையை பரிசோதிப்பதற்கு பல இன்னல்களை தருகிறான். அவ்வாறு ஒரு முஸ்லிம் பெரும் சோதனைக்கு ஆளாகும்போது, அவன் தனது மார்க்கத்தில் நிலைகுழைந்து விடாதிருக்க, அல்லாஹ் அவனுக்கு உபதேசம் செய்து நேரான பாதையில் நிலைத்திருக்கச்செய்ய ஒரு நல்ல மனிதரை ஏற்படுத்திக்கொடுக்கிறான். அந்த நல்ல மனிதனின் சில வார்த்தைகளின் மூலம் அல்லாஹ் அவனுக்கு நல்ல பயன்களை அளித்து அவனை சீர்ப்படுத்துகிறான்.
அந்த நல்ல மனிதரின் வார்த்தைகள் அல்லாஹ்வைப்பற்றியும் அவனின் சந்திப்பு மற்றும் சுவர்க்கம் நரகம் போன்ற விடயங்களை ஞாபகப்படுத்துவதினாலும் நிறைந்திருக்கும்.
இதோ நாம் உமக்கு இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்களின் வரலாற்றிலிருந்து ஒர் உதாரணத்தைத் தருகிறோம். இமாம் அஹ்மத் அவர்கள், அல்குர்ஆன் படைக்கப்பட்டிருத்தல் என்ற சர்ச்சைக்கெதிரான போராட்டத்தில் மிகப்பெரும் சோதனைக்குட்பட்டு அவர் அதிலிருந்து -புடம்போடப்பட்ட- பட்டைத்தீட்டப்பட்ட ஒரு புனிதராக வெளிவந்தார்.
இமாம் அவர்கள் ஆட்சியாளரான மஃமுனிடம் விலங்கிடப்பட்டு, அவரின் அவைக்கு செல்வதற்கு முன் கடுமையாக எச்சரிக்கப்பட்டு அழைத்து செல்லப்பட்டார். இந்த கடுமையான எச்சரிக்கையை செவியேற்ற அவரின் பணியாள் மனம் தளர்ந்து இமாம் அவர்களிடம் பின்வருமாறு கூறினார்:
அபூ அப்தில்லாஹ்வே ! உங்களின் இந்த நிலை எனக்கு வருத்தமாகவும் மனதுக்கு கடினமாகவும் இருக்கிறது, ஒரு போதும் வாளை உருவாத மஃமூன் இப்போது வாளை உருவியிருக்கிறார். மேலும் நபியவர்களின் உறவினர் என்றும் கூறுகிறார். அல்குர்ஆன் படைக்கப்பட்டது என்ற அவரின் கூற்றை நீங்கள் ஏற்காதுவிட்டால் நிச்சயம் உங்களை அந்த வாளினால் கொன்று விடுவார். உங்களின் கொள்கையுறுதி அவரை இந்தளவிற்கு கொண்டுபோயிருக்கிறதே! ஆகையால் நீங்கள் மனம் தளராது உறுதியாக இருந்து கொள்ளுங்கள் என்று கூறினார்.
(அல் பிதாயா வன்னிஹாயா பாகம் 1 பக்கம் 332)
நுன்னறிவுமிக்க புத்திசாலிகள் தமது இமாமுக்கு (ஆசிரியருக்கு) உறுதியூட்டும் சில அறிவுறைகளை கூறுவதற்கு இங்கே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டனர்.
"ஸியருல் அஃலாமின்னுபலாஃ" என்ற நூலில் பாகம் 11 பக்கம் 238 ல் அபூ ஜஃபரினில்அன்பாரி மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் இமாம் அஹ்மத் அவர்கள் குறித்து பின்வருமாறு குறிப்பிடுகிறார் :
இமாம் அஹ்மத், கலீபா அல்-மஃமூனிடம் அழைத்துச் செல்லப்படும் செய்தி எனக்கு கிடைத்தது, உடனே நான் யூப்ரடீஸ் நதியைக் கடந்து அவரை சந்திப்பதற்காகச் சென்றேன், அப்போது அவர் தனிமையான ஒரு இடத்தில் அமர்ந்திருந்தார், நான் அவரை வாழ்த்தி ஸலாம் கூறினேன், அவர் என்னைப் பார்த்து அபூ ஜஃபரே! நீ கடுமையாக களைத்திருக்கீறீர் என்று கூறினார். நான் அதற்கு அது இருக்கட்டும், இன்று நீங்கள் ஒரு தலைவராக உள்ளீர்கள், மக்கள் உங்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுகிறார்கள். ஆகையால் நீங்கள் அல் குர்ஆன் படைக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்று பதிலளித்தால், மக்களில் ஒரு பிரிவினரும் பதிலளிப்பார்கள். நீங்கள் அவ்வாறு பதிலளிக்கவில்லையெனில், மக்களில்பலரும் பதிலளிக்காமல் விலகிக்கொள்வார்கள். இந்த மனிதன் உங்களை கொலை செய்யாதுவிட்டாலும் நீங்கள் மரணிக்கவே செய்வீர்கள். மரணம் தவிர்க்க முடியாதது. எனவே அல்லாஹ்வை பயப்படுவீர்களாக !

அல்குர்ஆன் படைக்கபட்டது என்பதை ஏற்றுவிடாதீர்கள். இவ்வார்த்தையைக் கேட்டவுடன் இமாம் அஹ்மத் அழுது கொண்டே மாஷா அல்லாஹ் உனது வார்த்தை எவ்வளவு அழகானது எனக் கூறினார். பிறகு அவர் அபூ ஜஃபரே!, நீங்கள் கூறியதை திரும்பவும் கூறுங்கள். உடனே நான் அவருக்குக் கூறியதை திரும்பவும் கூறினேன். அதற்கு அவர் மாஷா அல்லாஹ் என்று கூறினார்.
மேலும், இமாம் அஹ்மத் மஃமூனிடம் சென்ற பயணம் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார் :
இரவின் நடுப்பகுதியில் நாங்கள் அர்ரஹ்பா என்ற பகுதியை வந்தடைந்தோம். ஒரு மனிதர் எங்களிடம் வந்து, உங்களில் அஹ்மத் இப்னு ஹன்பல் யார்? என்று கேட்டார். அவரிடம் இதோ இருக்கிறார். என்றதும் ஒட்டக ஓட்டுனரிடம் சிறிது தாமதிப்பீராக எனக் கூறிவிட்டு, இமாம் அஹ்மதைப் பார்த்து, நீங்கள் இங்கே கொல்லப்பட்டு சுவர்க்கம் நுழைவதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது. நான் உங்கள் விவகாரங்களை அல்லாஹ்விடம் ஒப்படைக்கிறேன் எனப்பிரார்த்தித்துவிட்டு சென்றுவிட்டார். பின்னர் அவர் யார் என நான் அவரைப் பற்றி விசாரித்தேன். அதற்கு அவர் பாலைவனத்தில் கம்பளி வேலை செய்யும் ரபீஆ கோத்திரத்தைச் சேர்ந்த ஜாபிர் இப்னு ஆமிர் என்ற நல்ல மனிதர் என எனக்கு தெரிவிக்கப்பட்டது.
(ஸியரு அஃலாமின்னுபலாஇ பாகம் 11 பக்கம் 241)
மேலும், இப்னு கஸீர் (ரஹ்) தனது நூலான அல்பிதாயா வன்னிஹாயாவில் பின்வரும் சம்பவத்தைக் குறிப்பிடுகிறார். ஒரு நாட்டுப்புற அரபி இமாம் அஹ்மதிடம்,
"இமாம் அவர்களே, நீங்கள் மக்களின் தூதுவராக இருக்கிறீர், எனவே அவர்களுக்கு துரதிஷ்டமாக இருந்து விடாதீர், இன்று நீங்கள் மக்களின் தலைவர், எனவே அவர்கள் அழைக்கும் கொள்கையை அங்கீகரித்து பதில் அளிப்பதில் எச்சரிக்கையாக இருங்கள், அவ்வாறு நீங்கள் அங்கீகரித்து பதிலளித்தால் அந்த மக்களும் பதிலளிப்பார்கள், பின்னர் அவர்களின் பாவச்சுசுமைகளை நீங்கள்தான் மறுமை நாளில் சுமப்பீர்கள், எனவே நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாய் இருப்பீர்களாயின், எந்த (சத்திய) நிலைப்பாட்டில் அல்லது கொள்கையில் இருக்கிறீர்களோ அதில் பொறுமையுடன் உறுதியாக இருங்கள், ஏனெனில் உங்களுக்கும் சுவர்க்கத்திற்கும் இடையிலான இடைவெளி நீங்கள் கொல்லப்படுவதில்தான் உள்ளது" என்று கூறினார்.
இமாம் அஹ்மத் அவர்கள் அந்த நாட்டுப்புற அரபியின் அறிவுரை பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார் :
"அவர்கள் என்னை அழைக்கும் விடயத்திலிருந்து விலகி இருக்க வேண்டும் என்ற எனது உறுதிப்பாட்டை அவருடைய வார்த்தைகள் பலப்படுத்தியது"
(அல்பிதாயா வன்னிஹாயா : பாகம் 1 பக்கம் 332)
இன்னொரு அறிவிப்பில் இமாம் அஹ்மத் அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள் :
"யூப்ரடீஸ் நதியின் கரை ஓரத்தில், பஃதாத் மற்றும் ரக்காவுக்கும் மத்தியில் அமைந்துள்ள ரஹ்பத் தூக் என்ற இடத்தில் என்னைச் சந்தித்துப் பேசிய நாட்டுப்புற அரபி கூறிய வார்த்தைதான் நான் கேட்ட வார்த்தைகளில் எனது உள்ளத்தில் ஆழமாக பாதிப்பு செலுத்திய வார்த்தையாகும். அவர் என்னைப்பார்த்து இவ்வாறு கூறினார் : இமாம் அஹ்மத் அவர்களே! சத்தியம் உங்களை கொன்று விடுமென்றால் நீங்கள் ஷஹீதாக மரணிப்பீர்கள், அதே சத்தியத்துடன் நீங்கள் வாழ்ந்தால் கௌரவமாக வாழ்வீர்கள். இந்த வார்த்தைதான் எனக்கு மிகவும் உறுதியைத்தந்தது."
(ஸியரு அஃலாமின்னுபலாஃ : பாகம் 11 பக்கம் 241)
அல் குர்ஆன் படைக்கப்பட்டது என்ற பிரச்சினையில் தன்னுடன் உறுதியாக முகம் கொடுத்த வாலிபரான முஹம்மத் இப்னு நூஹ் பற்றி இமாம் அஹ்மத் பின்வருமாறு விவரிக்கிறார் :
வயதில் சிறியவராக இருந்தும் தனது அறிவிற்கேட்ப , அல்லாஹ்வின் கட்டளையில் உறுதியாக இருந்தோரில் முஹம்மது பின் நூஹை விட வேறு யாரையும் நான் பார்த்ததில்லை. அவரின் முடிவு சிறந்ததாக அமைந்திருக்க வேண்டுமென நான் எதிர்பார்க்கிறேன். ஒரு நாள் அவர் என்னைப்பார்த்து அபூ அப்துல்லாஹ்வே ! அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள், நீங்கள் என்னைப் போன்றவரல்ல, பிறர் முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றத்தக்க ஒரு மனிதர், உங்களிடம் இருக்கும் மார்க்க அறிவின் காரணமாக மனிதர்கள் உங்களுக்கு கட்டுப்படுகிறார்கள், எனவே அல்லாஹ்வைப் பயந்து கொள்வீர்களாக! அல்லாஹ்வின் கட்டளையில் உறுதியாக இருப்பீர்களாக என்று கூறினார். பின்னர் அவர் மரணித்துவிட்டார், அவருக்கு தொழுகை நடாத்தி அடக்கம் செய்தேன்.
(ஸியரு அஃலாமின்னுபலாஃ பாகம் 11 பக்கம் 242)

இமாம் அஹ்மத் அவர்கள் தொழுகை நடாத்திய கைதிகள் கூட இமாம் அவர்கள் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்க பங்களிப்புச் செய்தனர்.
இமாம் அவர்கள் சிறைவாசம் அனுபவிக்கும் போது ஒரு தடவை நிகழ்ந்த சம்பத்தை பின்வருமாறு குறிப்பிடுகிறார் :
"சிறைவாசம் அனுபவிப்பதையோ –சிறையும் வீடும் எனக்கு ஒன்றுதான் - வாளினால் வெட்டிக் கொலைசெய்யப்படுவதையோ நான் பொருட்படுத்தவில்லை, அதனால் எந்தக் கவலையுமில்லை. நான் பயப்படுவதெலலாம் சவுக்கினால் அடிப்பதின் மூலம் ஏற்படும் மனக்குழப்பத்தைத்தான்" இவ்வாறு இமாம் கூறியதை சில சிறைவாசிகள் செவிமடுத்தனர், அப்பொழுது அவர்கள்: அபூ அப்துல்லாஹ்வே! நீங்கள் அதற்கு பயப்படவேண்டாம்! இரண்டு சவுக்கடிகள்தான் கிடைக்கும், ஒன்று உங்களுக்கு புரியும், மற்றையது எங்கு பட்டது என்பது புரியாது உங்களுக்கு மயக்கம் ஏற்படும் என்று கூறினர்.
(ஸியரு அ.்.லாமின்னுபலா.்.பாகம் 11 பக்கம் 240)
எனவே சகோதரா! நல்லோர்களிடத்தில் அறிவுரை கேட்பதில் ஆர்வம் கொள்வீராக. அவ்வாறு அவர்கள் அறிவுரை சொன்னால் அத்னை புரிந்து நடப்பீராக!
ஆகவே, நீ பயணம் செய்யும் போது ஏதாவது நடக்கும் என்று பயந்தால், பயணத்திற்கு முன் அதைக் (அறிவுரை) கேளுங்கள்
சோதனையின் போது அல்லது விரைவில் நடக்கலாமென எதிர்பார்க்கப்படும் துன்பத்தின் முன் அறிவுரை கேளுங்கள்.
ஒரு பதவியில் நீ அமர்த்தப்பட்டால் அல்லது செல்வத்தை அனந்தரமாக பெற்றால் மேலும் செல்வம் கிடைத்துவிட்டால் அறிவுரை கேளுங்கள்.
நீயும் இம்மார்க்கத்தில் உறுதியோடு இருந்து மற்றவர்களையும் உறுதிப்படுத்துவதற்கு ஆர்வம் கொள், அல்லாஹ் உண்மை இறைவிசுவாசிகளின் பொறுப்பாளனாவான்.
பதினைந்தாவது :
சுவனத்தின் இன்பம், நரகின் வேதனை பற்றி சிந்தித்தல், மற்றும் மரணத்தை நினைவு கூருதல்
சுவனம் என்பது கவலைகளைப் போக்கி மகிழ்ச்சியையும் இன்பத்தையும் ஆருதலையும் தரக்கூடிய இடமாகும். நம்பிக்கை கொண்டோர் தம் பயணத்தில் சென்றடையும் கடைசி இடமுமாகும். மனித உள்ளமானது தியாகங்களில் ஈடுபடாமல் நற்செயல்களைச் செய்யாமல் எதிலும் உறுதியில்லாமல் இருப்பதே இயல்பாகும். ஆனால் அந்தத் தியாகங்களுக்குக்கு பதிலாக பிரதி பலன் கிடைக்கும் என்றிருந்தால் தியாகம் செய்ய மனம் கொள்ளும். அந்தப் பிரதிபலன் சிரமங்களை மனதிற்கு எளிதாக்கும். செல்லும் பாதையில் எதிர்நோக்கும் கஷ்டங்களை இலகுபடுத்தும்.
ஆகவே ஒரு செயலுக்குரிய கூலியைத் தெரிந்து கொள்பவருக்கு அச்செயலிலுள்ள சிரமம் இலகுவாகிவிடும். அதில் அவன் தொடர்ந்து பயணிப்பான் என்பதே யதார்த்தமான விடயமாகும். அத்துடன் இக்கொள்கையில் உறுதியாக இல்லையெனில் வானங்கள் மற்றும் பூமி அளவுக்கு விசாலமான சொர்க்கம் நமக்குக் கிடைக்காமல் போய்விடும் என்பதைப் புரிந்துகொள்வான். மனித ஆன்மா சாதாரன மண்ணின் தன்மையிருந்து வானுலகின் உயர் நிலை நோக்கி செல்வதற்கான தேவை உள்ளது.
நபி (ஸல்) அவர்கள் சோதனைகளின் போது ஸஹாபாக்கள் நிலைகுழையாது இருப்பதற்காக சுவர்க்கம் பற்றி ஞாபகப்படுத்துபவராக இருந்தார்கள்.
ஸஹீஹான ஹதீஸில் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது : யாஸிர், அம்மார், உம்மு அம்மார் (ரழியல்லாஹு அன்ஹும்) போன்றோர் அல்லாஹ்வின் சத்திய மார்க்கத்தை ஏற்ற ஒரே காரணத்திற்காக நோவினை செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் அவர்களின் பக்கமாக நபி (ஸல்) அவர்கள் நடந்து சென்றார்கள், அப்போது அக்குடும்பத்தைப் பார்த்து :
"யாஸிரின் குடும்பமே! பொறுமை கொள்வீர்களாக! பொறுமையை கடைபிடிப்பீர்களாக! மறுமையில் உங்களுக்குரிய இடம் சுவர்க்கமாகும்" என்று கூறுவார்கள்.
(ஆதாதரம் : ஹாகிம் பாகம் 3 பக்கம் 383,
இது ஒரு ஹஸன் ஸஹீஹ் தரத்திலுள்ள ஹதீஸாகும். இதன் விபரத்தை அல்பானி அவர்களினால் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிக்ஹுஸ்ஸீறா என்ற நூலை பார்க்கவும் : பக்கம் 103.)
இது போல் நபியவர்கள் அன்ஸாரிகளுக்கு :
எனக்குப் பிறகு (அடக்குமுறை ஆட்சியாளர்களால்) தகுதியானவர் இருக்க தகுதியற்றவருக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதை நீங்கள் காணபீர்கள். எனவே எனக்கு பரிசாகக் கிடைக்கும் ஹவ்லுல் கவ்ஸரில் என்னை சந்திக்கும் வரையில் நீங்கள் பொறுமையாக இருங்கள் என்று கூறக்கூடியவர்களாக இருந்தார்கள்.
(புஹாரி முஸ்லிம்)

அதே போன்று ஒரு மனிதன் மண்ணறை வாழ்வு அதனைத் தொடர்ந்து வரக்கூடிய, மனிதர்கள் மறுமைக்காக ஒன்று திரட்டப்படுதல், மறுமை விசாரணை, நன்மை தீமை எடைபோடுதல், ஸிராத்தை கடந்து செல்லல் போன்ற மறுமையுடன் தொடர்பான ஒவ்வொரு கட்டங்களிலும் நல்லவர்கள் தீயவர்களின் நிலைமைகளைச் சற்று சிந்திக்கின்றபோது தனது கொள்கையில் உறுதிப்பாட்டை அடைந்து கொள்ள முடியும்.
அதுபோல மரணத்தை நினைவுகூர்வது ஒரு முஸ்லிமை தீமையான காரியங்களிலிருந்து பாதுகாப்பதோடு அல்லாஹ் விதித்த வரம்புகளை மீறாது அவற்றின் வரையறைகளோடு அவனை நிலைநிறுத்துகிறது.
ஏனெனில், அவன் மரணம் செருப்பின் வாரைவிடவும் மிகவும் நெருக்கமாக உள்ளது என்றும், தனது கடைசி நேரம் இன்னும் சில நொடிப்பொழுதுகளில் வந்துவிடும் என்பதையும் அறிந்து கொண்டால், அவன் மார்க்கத்திலிருந்து தடம் புரளவும் அல்லது அசத்தியத்தில் பிடிவாதமாக இருக்கவும் அவனது உள்ளம் எப்படித் தூண்டும்?
இதனால் தான் நபி (ஸல்) அவர்கள் :
"இன்பங்களை அழித்துவிடக்கூடிய மரணத்தை மிக அதிகமாக நினைவுகூருங்கள்" எனக் கூறியுள்ளார்கள்.
(ஆதாரம் : திர்மிதி, பாகம் 2 பக்கம் 50, அல்பானி அவர்கள் இர்வாஉல் கலீல் பாகம் 3 பக்கம் 145 ல் இந்த ஹதீஸ் ஸஹீஹானது எனத் தீர்ப்பளித்துள்ளார்கள்.)
சத்தியத்தில் உறுதியோடு நிலைத்து நிற்க வேண்டிய சந்தர்ப்பங்கள்
அவை அதிகமாக உள்ளன, அவற்றை விரிவாக குறிப்பிட வேண்டிய தேவை உள்ளது, எனினும் இவ்விடத்தில் அவற்றின் சிலதை சுருக்கமாக குறிப்பிடுகிறோம்.
முதலாவது :
சோதனையின் போது உறுதியாக இருத்தல்.
உள்ளங்களில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கான-புறல்வுகள் யாவற்றிற்கும்- காரணம் குழப்பங்களாகும். உள்ளமானது இன்பத்திலும் துன்பத்திலும் குழப்பங்களுக்கு உட்பட்டால் ஈமானால் தமது உள்ளங்களை நிறைத்துக் கொண்டோர் தவிர வேறு எவரும் இம்மார்க்கத்தில் உறுதியாக இருக்கமாட்டர்கள்.
சோதனைகளின் வகைகளில் சில :
1- செல்வத்தின் சோதனை. இச்சோதனைக் குறித்து அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு குறிப்பிடுகிறான் :
'அல்லாஹ் தனது அருளிலிருந்து எமக்கு வழங்கினால் நாங்கள் நிச்சயமாக தர்மம் செய்து நல்லவர்களில் ஆகிவிடுவோம்' என்று அவனிடம் உடன்படிக்கை செய்தோரும் உள்ளனர்.
அவன் தனது அருளிலிருந்து அவர்களுக்கு வழங்கியபோது அதில் அவர்கள் கஞ்சத்தனம் செய்து புறக்கணித்தவர்களாக பின்வாங்கிவிட்டனர்".
(ஸூறதுத்தவ்பா வசனம் 75-76)
2- அந்தஸ்து எனும் சோதனை
"தங்களது இரட்சகனின் சங்கையான முகத்தை நாடி காலையிலும் மாலையிலும் அவனை அழைப்போர்களுடன் நபியே நீர் உம்மை கட்டுப்படுத்திக்கொள்வீராக. இவ்வுலக வாழ்வின் அலங்காரத்தை நீர் விரும்பி அவர்களை விட்டும் உம்மிரு கண்களையும் திருப்பிவிடாதீர். எம்மை நினைவு கூர்வதை விட்டும் எவனது உள்ளத்தை நாம் மறக்கடிக்கடிக்கச் செய்து அவன் தனது மனோஇச்சையைப் பின்பற்றிவிட்டானோ அவனை நீர் பின்பற்றாதீர், மேலும் அவனது காரியம் வரம்பு மீறியதாகவே உள்ளது".
(ஸூறதுல் கஹ்ப் : 28)
மேற்கூறப்பட்ட இரு சோதனைகளின் ஆபத்து குறித்து பின்வருமாறு நபி (ஸல்) குறிப்பிட்டார்கள் :
ஒரு மனிதன் பதவிக்கும் பொருளுக்கும் பேராசைப்படுவது ஆடுகளிடையே அனுப்பப்பட்ட பசியுள்ள இரண்டு ஓநாய்களை விடவும் அவனது மார்க்கத்திற்கு மிகவும் ஆபத்தானது'.
[இமாம் அஹ்மத் அவர்கள் தனது முஸ்னதில் பாகம் 3 பக்கம் 460 பதிவு செய்துள்ளார். இந்த ஹதீஸ் ஸஹீஹ் அல் ஜாமிஇல் 5496 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.]
இந்த ஹதீஸின் கருத்து :'ஒரு மனிதன் பதவிக்கும் செல்வத்திற்கும் பேராசைப் படுவது, பசியுள்ள இரண்டு ஓநாய்கள் ஆட்டு மந்தையிடம் அனுப்பப்படுவதை விடவும் அவனது மார்க்கத்திற்கு மிகவும் ஆபத்தானது.
3- மனைவியின் சோதனை
"நிச்சயமாக உங்களது மனைவியரிலும், பிள்ளைகளிலும்சிலர் உங்கள் விரோதிகளாக இருக்கின்றனர். ஆகவே நீங்கள் அவர்கள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்".
(அத்தகாபுன்: வசனம் : 14)

4- பிள்ளைகளின் சோதனை
பிள்ளைச் செல்வம் கோழைத்தனத்தையும், கஞ்சத்தனத்தையும், கவலையும் ஏற்படுத்தக்கூடியது.
(அபூ யஃலா அவர்கள் தனது முஸ்னதில் பாகம் 2 பக்கம் 305 பதிவு செய்துள்ளார்கள். இந்த ஹதீஸை உறுதிப்படுத்தும் பல ஹதீஸ்கள் உண்டு. மேலும் இந்த ஹதீஸ் ஸஹீஹ் அல் ஜாமிஇல் 7037 இடம்பெற்றுள்ளது.)
5- அடக்குமுறை, அநீதி, அத்துமீறல் போன்றவற்றால் ஏற்படும் சோதனை. இதற்கான மிகச் சிறந்த உதாரணமாக அல்லாஹ் கூறும் கிடங்கு வாசிகளின் சம்பவம் அமைந்துள்ளது. அல்லாஹ் இது குறித்து குறிப்பிடுகையில் :
"தீக்குண்டத்திற்குரியோர் சபிக்கப்பட்டுவிட்டனர்.
அது எரிபொருளுடைய நெருப்பாகும்
அவர்கள் அதன் அருகில் அமர்ந்திருந்து
நம்பிக்கையாளர்களுக்கு தாம் (வேதனை) செய்வதை பார்த்துக் கொண்டிருந்தனர்.
யாவற்றையம் மிகைத்தவனும் புகழுக்குரியோனுமாகிய அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டதற்காகவேயன்றி (வேறெதற்கும்) அவர்களை இவர்கள் பழிவாங்கவில்லை.
அவன் எத்தகையவென்றால் வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அவனுக்கே உரியதாகும். அல்லாஹ் யாவற்றையும் பார்ப்பவன்.
(அல் புரூஜ் 4-9)
ஹப்பாப் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள் :
இறைதூதர் (ஸல்) கஃபாவின் நிழலில் தம் போர்வை ஒன்றை தலையனையாக வைத்து சாய்ந்து கொண்டிருந்த போது அவர்களிடம் இஸ்லாத்தின் எதிரிகள் எங்களுக்கிழைக்கும் கொடுமைகளை முறையிட்டோம்.
அதற்கு நபி (ஸல்) அவர்கள் :
உங்களுக்கு முன்னிருந்தவர்களிடையே (ஓரிறைக் கொள்கையை ஏற்று இறைத்தூதரை நம்பிய) ஒரு மனிதர் பிடிக்கப்பட்டு அவருக்காக நிலத்தில் குழி தோண்டப்பட்டு அதில் அவர் நிறுத்தப்படுவார். பின்னர் அரிவாள் கொண்டுவரப்பட்டு அவரின் தலையில் வைக்கப் பட்டு அதனால் இரண்டு பாதியாக பிளக்கப்படும். பழுக்கக் காச்சிய இரும்பு சீப்புகளால் அவர் மேனி கோதப்பட அது அவரது தசையையும் எலும்பையும் கடந்து சென்று விடும். ஆயினும் அந்தக் கொடுமையானது அவரை அவர் ஏற்ற மார்கத்திலிருந்து வழிபிறழச் செய்யவில்லை. என அவர்கள் பதிலளித்தார்கள்.
(ஆதாரம்: புஹாரி . மேலும் பத்ஹுல் பாரி பாகம் 12 பக்கம் 315 பார்க்கவும்.)
6- தஜ்ஜாலின் குழப்பம்
இவ்வுலகில் எதிர்கொள்ளும் மிகப்பெரும் குழப்பமாக தஜ்ஜாலின் குழப்பம் காணப்படுகிறது. இது குறித்து நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் :
மக்களே! இந்த பூமியில் நபி ஆதம் (அலை) அவர்கள் படைக்கப் பட்டது முதல் தஜ்ஜாலின் குழப்பத்தைத் தவிர சோதனை மிக்க வேறெந்த குழப்பமும் இருந்ததில்லை. அல்லாஹ்வின் அடியார்களே! மக்களே ! இந்த சோதனைமிக்க குழப்பத்தில் உங்கள் மார்க்கத்தில் உறுதியாக இருந்து கொள்ளுங்கள். அவனைப் பற்றி எனக்கு முன்னர் வந்த எந்த நபியும் வர்ணிக்காதளவு உங்களுக்கு நான் வர்ணிக்கிறேன். (பின்பு அவற்றை விவரித்தார்கள்)
(இப்னு மாஜா: பாகம் 2 பக்கம் 1359, ஸஹீஹுல் ஜாமிஇல் 7752 வது ஹதீஸைப்பார்க்கவும்)
உள்ளங்கள் உறுதியாக இருக்கும் நிலைகள் பற்றியும் குழப்பங்களின் போது எவ்வாறு தடம்புரண்டு மாற்றத்திற்கு உள்ளாகும் என்பதையும் நபி (ஸல்) பின்வரும் ஹதீஸில் குறிப்பிடுகின்றார்கள் :
ஒவ்வொரு ஈர்க்காக வைத்துப் பாய் பின்னப்படுவதைப் போன்று மக்கள் உள்ளங்களில் சோதனைகள் காண்பிக்கப்படும். எந்த உள்ளம் அச்சோதனைகளில் ஊறிவிடுமோ அந்த உள்ளத்தில் ஒரு கரும்புள்ளி இடப்படும். எந்த உள்ளம் அவற்றை நிராகரித்து விடுகிறதோ அந்த உள்ளத்தில் ஒரு வெண்புள்ளி இடப்படும். இவ்வாறு சோதனைகள் இரு விதமான உள்ளங்களில் ஏற்படுகின்றன. ஒன்று, வெண்பாறை போன்று தூய்மையானது, வானங்களும் பூமியும் நிலைத்திருக்கும்வரை எச்சோதனையும் அதற்கு தீங்கு விளைவிக்காது. மற்றொன்று, சிறிதளவு வெண்மை கலந்த கருமையான உள்ளம். அது தலைகீழாகக் கவிழ்க்கப்பட்ட கூசாவைப் (குவளையைப்) போன்று நல்லதை அறியவும் செய்யாது தீமையை நிராகரிக்கவும் செய்யாது. அதற்குத் தெரிந்ததெல்லாம் மனோ இச்சையில் அமிழ்ந்து (ஊறிக்) கிடப்பது மட்டும்தான்.

[இந்த ஹதீஸ் முஸ்னத் அஹ்மதில் பாகம் 5 பக்கம் 386 லும், முஸ்லிமில் பாகம் 1 பக்கம் 128 லும் பதிவு செய்யப்பட்டது. இங்கு குறிப்பிடப்பட்ட ஹதீஸ் வாசகம் முஸ்லிமுக்குரியது.]
அரலுல் ஹஸீர் என்பதன் கருத்து : ஒருவர் பாயில் தூங்கினால் தூங்கியவரின் விலாப்பக்கத்தில் தடயங்களை ஏற்படுத்துவது போல் குழப்பங்கள் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்.
"முர்பதன்" என்பது கருப்பு நிறம் கலந்த கடும் வெள்ளை நிறம் என்பது பொருளாகும். "முஜக்கியன்" என்பது தலை கீழாக புறட்டப்பட்ட என்பது கருத்தாகும்.
இரண்டாவது :
அறப்போராட்டத்தின் போது உறுதியாக இருத்தல்.
"ஈமான் கொண்ட விசுவாசிகளே ! நீங்கள் போராட்டகளத்தில் எதிரிகளின் ஒரு பிரிவினரை எதிர்க்க நேர்ந்தால் நீங்கள் உறுதியாக இருங்கள்".
(அல்அன்பால் வசனம் 45)
எமது மார்க்கத்தில் யுத்தகளத்திலிருந்து விரண்டோடுதல் பெரும்பாவங்களில் ஒன்றாக கணிக்கப்படுகிறது. நபி (ஸல்) அவர்கள் கூட அகழ் யுத்தத்தின் போது தனது முதுகில் மண்ணைச் சுமந்த நிலையில் ஏனைய ஸஹாபாக்களுடன் சேர்ந்து :
யாஅல்லாஹ்! எதிரிகளை நாம் சந்தித்தால் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக என்று அடிக்கடி கூறக்கூடியவர்களாக இருந்தார்கள்.
[ஆதாரம் : புஹாரி கிதாபுல் கஸவாத், பிரிவு: அகழ் யுத்தம் பத்ஹுல் பாரி பாகம் 7 பக்கம் 399]
மூன்றாவது :
கொள்கையில் (இலட்சியத்தில்) உறுதியாக இருத்தல். இது குறித்து அல்லாஹ் :
"அல்லாஹ்வுடன் தாம் செய்த வாக்குறுதியை உண்மைப்படுத்தும் மனிதர்களும் நம்பிக்கை கொண்டோரில் உள்ளனர். அவர்களில் தமது இலட்சியத்தை நிறைவேற்றியவர்களும் உள்ளனர். இன்னும் அவர்களில் (அதை) எதிர்பார்த்திருப்போரும் உள்ளனர். அவர்கள் (தமது வாக்குறுதியில்) எவ்வித மாற்றமும் செய்யவில்லை என்று குறிப்பிடுகின்றான்".
(அல்அஹ்ஸாப் : 23)
மேற்குறிப்பிடப்பட்ட இறைவசனமானது உண்மை இறைவிசுவாசிகள் தங்களது உயிர்களை விடவும் கொள்கையை, இலட்சியத்தை உயர்வாகக் கருதக் கூடியவர்களாகவும் எந் நேரத்திலும் இதில் விட்டுக்கொடுப்புகள் கிடையாது என்ற அவர்களின் ஆழமான உறுதியையும், நம்பிக்கையையும் எடுத்துக்காட்டுகிறது.
நான்காவது :
மரணத்தின் போது உறுதியாக இருத்தல்
இறை கட்டளைகளை மறுத்து, தீய செயல்களில் மூழ்கியிருந்த மக்களைப் பொருத்தவரை மிகவும் கடினமான தருணங்களில் மார்க்கத்தில் உறுதியாக இருக்கும் பாக்கியத்தை இழப்பர். அதிலும் குறிப்பாக மரணத்தருவாயில் ஷஹாதா கலிமாவை மொழிவதற்கு இயலாத ஒரு ஆபத்தான நிலை அவர்களுக்கு ஏற்படும்.
இவ்வாறான நிலை தீய முடிவின் அடையாளமாகும், ஒரு மனிதரிடம் அவரின் மரணத்தருவாயில் :
ஏகத்துவக் கலிமாவை சொல்லுமாறு வேண்டப்பட்ட வேளை, அவர் தனது தலையை வலப்பக்கமாகவும் இடப்பக்கமாகும் அசைத்தாரே தவிர அதனை கூறுவதற்கு மறுத்துவிட்டார்.
அதே போல் இன்னொரு மனிதரிடம் அவரின் மரணத்ருத்தருவாயில் ஏகத்துவக் கலிமாவை கூறுமாறு சொன்ன வேளை, அதற்கு அவர்:
இது நல்ல நிலம், இதன் விலை குறைவானது என்றும்,
மூன்றாம் ஒரு நபர், ஏகத்துவக்கலிமாவிற்குப் பதிலாக சதுரங்க (செஸ்) விளையாட்டில் பயன்படுத்தப்படுத்தப்படும் காய்களின் பெயர்களையும்,
நான்காவது ஒரு நபரின் நிலை, ராகங்கள் மற்றும் பாடல் வரிகளை கூறுவதும் தனது காதலியை பற்றிக் நினைவு கூறுவதுமாகவே இருந்தது. இவ்வாறான மோசமான நிலைகளைவிட்டும் அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக!
இந்த அவல நிலை இவர்களுக்கு ஏற்படக்காரணம், அல்லாஹ்வின் கட்டளைகளை அவர்கள் எடுத்து நடக்காது அவனின் எந்த சிந்தனையுமின்றி உலகின் அற்பமான காரியங்களில் மூழ்கிப்போனதினாலாகும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.
சில வேளை இவ்வாறானோர் உயிர் பிரியும் தருவாயில், முகம் கருப்பதும், துர்நாற்றம் வீசுவதும், கிப்லாவை விட்டு வேறுபக்கம் திரும்பிக்கொள்வதும் இடம் பெறும். லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்.(தீமையை விட்டு விலகுவதற்கான ஆற்றல்

பெறுவதும் நன்மை செய்ய சக்தி பெறுவதும் அல்லாஹ்வின் உதவி கொண்டே தவிர வேறில்லை) அவனே அனைத்திற்கும் போதுமானவன்.
இதற்கு மாறாக, நபிவழிமுறையை கடைப்பிடித்து வாழ்ந்த நல்லோர்கள் மரணிக்கும் போது அவர்கள் மார்க்கத்தில் உறுதியாக இருப்பதற்கு அல்லாஹ் உதவி செய்கிறான், அதனால் அவர்கள் இலகுவாக ஷஹாததுல் கலிமாவை மொழிவார்கள்.
இவ்வாறானோர் உயிர் பிரியும் தருவாயில் இவர்களது முகங்கள் மலர்ச்சியோடு காணப்படுவதும், நறுமணம் விசுவதும், சுவர்க்கம் நுழைவதற்கான ஒரு வகை நண்மாராயம் கிடைத்திருப்பதையும் எம்மால் உணர முடியும்.
மரணத்தருவாயில் திருக்கலிமாவை மொழியும் பாக்கியத்தை பெற்று கொள்கை உறுதியோடு மரணித்த ஒருவரின் சம்பவத்தை பார்ப்போம். அவரின் பெயர் அபூஸுர்ஆ அர்ராஸி, ஹதீஸ்கலை மேதைகளில் ஒருவர் :
அபூ ஸுர்ஆவின் எழுத்தாளர் அபூ ஜஃபர் முஹம்மத் இப்னு அலீ அவரைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார் :
ரய் நகரத்தின் ஒரு கிராமமான ஷஹ்ரான் என்ற கிராமத்தில் அமைந்துள்ள அபூஸுர்ஆ அவர்களின் வீட்டிற்கு அவரின் மரணத்தருவாயில் வந்திருந்தோம். அவ்வேளை அவரிடம் அபூஹாதிம், இப்னு வாரா, அல் முன்திர் இப்னு ஷாஸான் மற்றும் ஏனைய அறிஞர்களும் உடன் இருந்தனர்.
அவ்வேளை அவரகள் ஹதீஸுத் தல்கீன் என்றழைக்கப்படும் (மரணத்தருவாயில் உள்ளவருக்கு கலிமாவை சொல்லிக்கொடுத்தல் பற்றிய) பின்வரும் ஹதீஸை ஞாபகப்படுத்தினார்கள் :
மரணத்தருவாயில் இருப்போருக்கு "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற ஏகத்துவக்கலிமாவை சொல்லிக்கொடுங்கள்'.
இமாம் அபூ ஸுர்ஆவிற்கு கலிமாவைக் சொல்லிக்கொடுப்பதற்கு அங்கிருந்தவர்கள் வெட்கப்பட்டார்கள். அப்போது அங்கிருந்தவர்களில் சிலர் வாருங்கள், அந்த ஹதீஸை ஞாபகப்படுத்திக்கொள்வோம் என்றனர்.
அங்கிருந்த இப்னு வாரா என்பவர்,
அந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரைக் கூற ஆரம்பித்தார். எங்களுக்கு அபூ ஆஸிம் கூறினார், அபூ ஆஸிமுக்கு அப்துல் ஹமீத் கூறினார், அப்துல் ஹமீதுக்கு ஸாலிஹ் கூறினார், அத்தோடு நிறுத்திக் கொண்டார்.
தொடர்ந்தும் அபூ ஹாதிம் அவர்கள்:
எங்களுக்கு புன்தார் கூறினார், புன்தாருக்கு அபூஆஸிமும், அபூ ஆஸிமுக்கு அப்துல் ஹமீத் இப்னு ஜஃபரும், அப்துல் ஹமீதுக்கு ஸாலிஹ் என்பவரும் கூறினார் என்று கூறி நிறுத்திக்கொண்டார். ஏனையோர் மௌனமாக இருந்தனர்.
அபூ ஸுர்ஆ அவர்களோ மரணத்தருவாயில் இருந்த வேளை தனது இரு கண்களையும் திறந்து,
எங்களுக்கு புன்தார் கூறினார், புன்தாருக்கு அபூஆஸிமும், அபூ ஆஸிமுக்கு அப்துல் ஹமீத் இப்னு ஜஃபரும், அப்துல் ஹமீத் என்பவருக்கு ஸாலிஹ் என்பவரும் ஸாலிஹ் என்பருக்கு இப்னு அபீ கரீப் என்பவரும் இப்னு அபீ கரீபிக்கு கஸீர் இப்னு முர்ரா என்பவரும் கஸீர் இப்னு முர்ராவுக்கு முஆத் (ரழி) அவர்களும் கூறினார்கள் : முஆத் ரழி அவர்களுக்கு,
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"எவரது இறுதி வார்த்தை "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்று உள்ளதோ அவர் சுவர்க்கம் நுழைவார்".
அத்தோடு அவரின் உயிர் பிரிந்தது. அல்லாஹ் அவருக்கு அருள்புரிவானாக.
(ஸியர் அஃலாமின்னுபலாஃ, பாகம் 13 பக்கம் 76-85)
இவ்வாறானோர் குறித்து அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான் :
"நிச்சயமாக எவர்கள் தமது இரட்சகன் அல்லாஹ்வே எனக்கூறி, பின்னர் அதில் உறுதியாக இருக்கிறார்களோ அவர்கள் மீது வானவர்கள் இறங்கி 'நீங்கள் அச்சப்பட வேண்டாம், துக்கப்படவும் வேண்டாம், உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாறயம் பெறுங்கள்' என்று கூறுவர்".
(புஸ்ஸிலத் : 30)
யாஅல்லாஹ் இவர்களில் ஒருவராக எங்களையும் ஆக்கியருள்வாயாக!
யா அல்லாஹ்! இம்மார்க்கத்தில் ஸ்திரத்தன்மையையும் நேர்வழியில் உறுதியையும் உன்னிடம் நாம் கேட்கிறோம்.
அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் என்பதே எமது பிரார்த்தனையின் முடிவாகும்.